விலை ரூபா: 8.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION
பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN
COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

பக்கங்கள்:- பன்னிரண்டு
சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 04 ஞாயிற்றுக்கிழமை (17.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 119



எரிகின்ற மினிபஸ்

## மினிபஸ்–மோ.சைக்கிள் விபத்தில் இளைஞர் பலி

### இருபாலையில் சம்பவம்

(கல்வியங்காடு)

முகமாலையிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் மினிபஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியள வில் இருபாலைச் (12 ஆம் பக்கம் பார்க்க)



அணைக்கப்படும் தீ

படங்கள்: விஜய் போட்டோ இருபாலைச் சந்தி.

# புலிகளின் நாடிபிடித்தறிவதில் அரச உயர் மட்டம் தீவிர முயற்சி

(நமது நிருபர்)

**தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கான ஆயத்த வேலைகளில் அரசாங்கம் தீவிரமாக இறங்கியிருப் பதாக அரசின் உயர் மட்டங்களில் இருந்து கசிந்த தகவல்கள் மூலம் அறியவந்திருக்கிறது. அநேக மாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் இதற்கு விடு தலைப் புலிகளின் நாடித் துடிப்பு எப்படிப்பட்டது என்பதை அறிந்து கொள்வது குறித்து அரசின் உயர் மட்டத்தில் ஆராயப்பட்டிருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது.**

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலாக இருந்தாலும் சரி, ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும் சரி அதற்கான உத்தரவுகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கைகளில் தற்போது உள்ளன.

அநேகமாக ஜனாதிபதித் தேர்தலே நடப் பதற்கு வாய்ப்புள்ளதாக எதிர்வுகூறப்படும் நிலையில் மீண்டும் தான் ஜனாதிபதி வேட் பாளராக நிற்க முடியாது என்பது ஜனாதி பதிக்குத் தெரியும். இந் நிலையில் ரட்ண சிறி விக்கிரமநாயக்காவை முன்நிறுத்தி தேர்தலை எதிர்கொள்வது ஜனாதிபதியின் திட்டமாக இருப்பதாக கூறப்படுகிறது.

ஆனால், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் செல்வாக்கும் அவ்வளவு குறைவானது அல்ல என்பது சுதந்திரக் கட்சி வட்டாரங்களில் முன்வைக்கப்படுகிறது. இவர்கள் இருவரில் யாரைத் தேர்தலில் நிறுத்தி புலிகளின் ஆதரவைப் பெறமுடியும் என்பதை நாடி பிடித்து அறிவதிலும் அதனைப் பிரசாரங் களில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் இன்று வருகிறார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று இலங்கைக்கு வரவுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் அவர் இன்று புத்தளம் பகுதிக்குச் சென்று முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேச்சு நடாத்து வார்.

மட்டக்களப்புக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய பாராளுமன்றில் தமிழ்ச்செல்வன் குழுவினர்

(ஜரிஸ்)

ஜரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்

சுனாமியால் ஏற்பட்ட மனிதாபிமான நெருக்கடியின் யதார்த்த நிலைமைகளை யும் அதன்பின்னர் நியாயமான அடிப்படை

## விடுமுறை வழங்குவதில் முறுகல் 3 இராணுவத்தினர் சுட்டுக் கொலை

### சாவகச்சேரி இராணுவ முகாமில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள 6ஆம், 7ஆம் சிங்க

கொல்லப்பட்டுள்ளனர். விடுமுறை விண்ணப் பக் கோரிக்கை தொடர்பாக ஏற்பட்ட வாக்கு

மட்டக்களப்புக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி (12 ஆம் பக்கம் பார்க்க)

அநேகமாக ஜனாதிபதித் தேர்தலே நடப் பதற்கு வாய்ப்புள்ளதாக எதிர்வுகூறப்படும்

திட்டமாக இருப்பதாக கூறப்படுகிறது. ஆனால், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின்

களில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பிய பாராளுமன்றில் தமிழ்ச்செல்வன் குழுவினர்

(ஐரிஸ்)

ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற் கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நேற்று ஐரோப்பிய பாராளுமன் றத்தின் பொருளாதார், நிதி விவகாரக் குழு வின் உறுப்பினர் ஒயின் ரியானை ஐரிஸ் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் சந்தித் துக் கலந்துரையாடினர்.

சுனாமியால் ஏற்பட்ட மனிதாபிமான நெருக்கடியின் யதார்த்த நிலைமைகளை யும் அதன்பின்னர் நியாயமான அடிப்படை யில் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெ டுப்பதான பொதுக் கட்டமைப்பொன்றினை உருவாக்குவதில் காட்டப்பட்டுவரும் தயக்க நிலைமைகளையும் அம்பலப்படுத்தி சர்வ தேச சமூகத்திற்கு காண்பிப்பதே தமது நோக்கமாகும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக பிக்குமார் கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் சுனாமி புனரமைப்பு பணிகளை முன்னெடுப்பது குறித்து அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து அமைக் கவுள்ள பொதுக்கட்டமைப்புக்கு எதிராக 30 ஆயிரம் கையெழுத்துக்களை திரட்ட ஜே.வி.பி. சார்பு கொண்ட தேசிய பிக்குகள் முன்னணி தீர்மானித்துள்ளது.

பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டால் நாட்டிற்கும் சிங்கள இனத்திற்கும் ஏற்படும் பாதிப்புகள் பற்றி எடுத்துக் கூறி பொதுக் கட்டமைப்புத் திட்டத்தை கைவிடுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கும் முக மாகவே இந்தக் கையெழுத்துத் திரட்டும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பிக்கு கள் முன்னணியின் செயலாளர் கலவெல் கல சந்தாலோக தேரர் தெரிவித்தார்.

30 ஆயிரம் கையெழுத்துக்களையும் பிக்குகளிடம் திரட்ட நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகவும் சந்தா லோகதேரர் மேலும் தெரிவித்தார். பொதுக்கட்டமைப்பு ஒரு மாயை (12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுமுறை வழங்குவதில் முறுகல் 3 இராணுவத்தினர் சுட்டுக் கொலை

## சாவகச்சேரி இராணுவ முகாமில் சம்பவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள 6ஆம், 7ஆம் சிங்க ரெஜிமென்ற் இராணுவ முகாமில் நேற்றுப் பகல் 11 மணியளவில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூன்று இரா ணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேஜர் தர இராணுவ அதிகாரி ஒருவரும் இரண்டு சிப்பாய்களும் இந்த சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளனர். விடுமுறை விண்ணப் பக் கோரிக்கை தொடர்பாக ஏற்பட்ட வாக்கு வாதத்தையடுத்தே இந்தத் துப்பாக்கிச் சூட் டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக. ஆரம்ப விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவத்தில் 2 ஆம் தர கட்டளை அதிகாரி மேஜர் சுஜீவ ரத்தினவீர, கோப் ரல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சொருவில் தாக்குதலில் உயிரிழந்த விஜயனின் உடலை என்ன செய்வது?

## அரசாங்கம் திண்டாட்டம்

(கொழும்பு)

லெப். கேணல் கௌசல்யனைக் கொன்ற தாகக் கருதப்படும் இந்தியக் குடியுரிமை பெற்ற விஜயனின் உடலை அடக்கம் செய் வதில் இலங்கை அரசாங்கத்திற்குப் பெரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், இந்திய இராணுவத்தின் உதவிப்படை உறுப்பினரான இவர் தனது சகாக்கள் சிலருடன் இலங்கை வந்துள் ளார்.

இலங்கை இராணுவத்தினரின் புல னாய்வுப் பிரிவினரின் உதவியுடன் முத லாவது தாக்குதலாக மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறப்பாளரைக் கொலை செய்ததன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் மிகவும் நம்பிக்கைக்கு உரியவரானார். இவர் நேற்று முன்தினம் சொருவிலவில்

(12 ஆம் பக்கம் பார்க்க)


SWISS
Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices



Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

வருமானத்திற்கு அதிகமாக சொத்துக் குவிப்பு வழக்கு;

# இந்திய மாஜி அமைச்சர் ஜனார்த்தனனுக்கு இரண்டு ஆண்டு சிறை; மனைவி விடுவிப்பு

(சென்னை)

வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த வழக்கில் இந்திய முன்னாள் பால்வளத்துறை அமைச்சர் ஜனார்த்தனனுக்கு 2 ஆண்டு சிறைத் தண்டனையும், ரூ.50ஆயிரம் அபராதமும் விதித்துக் கடலூர் கோர்ட் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் அவரது மனைவி பிரேமா விடுதலை செய்யப்பட்டார்.

கடலூரைச் சேர்ந்த ஜனார்த்தனன் அ.தி.மு.கவில் மாவட்டச் செயலர் உள்ளிட்ட பல பொறுப்புக்கள் வகித்து வந்தார். கடந்த 1991ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றப் பொதுத்தேர்தலில் விழுப்புரம் சட்டமன்ற வேட்பாளராக அ.தி.மு.க சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ஜனார்த்தனன் கடந்த 1994ஆம் ஆண்டு பால்வளத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று 96ஆம் ஆண்டுவரை பதவியில் இருந்தார்.

அடுத்து வந்த பொதுத் தேர்தலில் தி.மு.க.வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்பேற்றது. இதற்குப் பின்னர் அ.தி.மு.க ஆட்சியின்போது அமைச்சர்களாக இருந்தவர்கள் சிலர் மீது வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்ததாகப் புகார்கள எழுந்தன. இந்தப் புகாரின் அடிப்படையில் தற்போதைய முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட சில அமைச்சர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

இதில் கடலூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு மற்றும் லஞ்சத் தடுப்புப் பிரிவு பொலிஸார் முன்னாள் அமைச்சா ஜனார்த்தனன் மீது வருமானத்திற்கு அதிகமாக சொத்துச் சேர்த்ததாகக் கடந்த 1997ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி முதல் தகவல் அறிக்கை. பதிவு செய்தனர். இதைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சாின் வீடுகள் மற்றும் அவரது உறவினர்களின் வீடுகளை லஞ்ச ஒழிப்புப் பிரிவு பொலிஸார் சோதனை செய்தனர்.

இதில் முன்னாள அமைச்சர் ஜனார்த்தனன், கடந்த 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி முதல் 1996ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதிவரை அவரது வருவாய்க்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்ததற்கான ஆவணங்கள் மற்றும் ரொக்கப் பணம் ஆகியவற்றை லஞ்ச ஒழிப்பு பொலிஸார் கைப்பற்றி விசாரணை செய்தனர். இதில், எம்.எல்,ஏ ஆவதற்கு முன் ஜனார்த்தனன் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார் என்பதும்,



அப்போது இவருக்கு 3ஆயிரம் மதிப்புள்ள ஒரு ஸ்கூட்டர், ரூ.1.50 இலட்சம் மதிப்புள்ள அம்பாசிடர் கார், ரொக்கப் பணம் ரூ.25ஆயிரம் மற்றும் வங்கிக்கணக்கில் ரூ.256 மட்டுமே சொத்துக்களாக இருந்ததும் தெரியவந்தது. இவற்றின் மதிப்பு 1இலட்சத்து 78ஆயிரத்து 429ரூபாவாகும்.

ஜனார்த்தனன் எம்.எல்.ஏ மற்றும் அமைச்சர் ஆன பிறகு வீடுகள், நில. பண்ணை வீடு, கார், ரோடு ரோலர் உட்பட ரூ.56இலட்சத்து 13ஆயிரத்து 429 ரூபாய் அளவிற்கு வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்திருப்பது விசாரணையில் தெரியவந்தது. இதன் அடிப்படையில் கடலூர் லஞ்ச ஒழிப்புத்துறையின் அப்போதைய - டி.எஸ்.பி.விஸ்வநாதன் மற்றும் முன்னாள் அமைச்சர் ஜனார்த்தனன் மற்றும் அவரது மனைவி பிரேமா ஆகியோர் மீது வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்ததாகக் கடலூர் மாவட்ட குற்றவியல் முதன்மை நடுவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. கடந்த 8ஆண்டுகளாக நடந்துவந்த இந்த வழக்கில் நேற்றுமுன்தினம் காலை தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர் ஜனார்த்தனனின் மனைவி பிரேமா மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்படாததால் அவர் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். இதைத்தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஜனார்த்தனன் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதால் அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.50 ஆயிரம் அபராதமும் விதித்து நீதபதி பூதநாதன் தீர்ப்பளித்தார்.

அபராதத் தொகையைக் கட்டத் தவறினால் மேலும் 3 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என நீதிபதி பூதநாதன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கில் 100 சாட்சிகள் மற்றும் 96 ஆவணங்கள் விசாரணையின் போது விவாதிக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு 100 பக்கங்கள் கொண்டதாக இருந்தது. இந்தத் தீர்ப்பின் மீது மேல் முறையீடு செய்ய கால அவகாசமாக 30 நாட்கள் அளிக்கபட்டுள்ளன. இதைத் தொடர்ந்து ஜனார்த்தனன் சொத்து ஜாமீனில் விடப்பட்டார்.

ஜனார்த்தனன் வழக்கில் தீர்ப்பு கூறப்படுவதை அறிந்து அ.தி.மு.க பிரமுகர்கள், 100க்கும் மேற்பட்ட அவரது ஆதரவாளர்களும், பத்திரிகை நிருபர்களும் கோர்ட்டில் காத்திருந்தனர். இதனால் கோர்ட் வளாகம் நேற்றுமுன்தினம் காலை முதல் பரபரப்பாகக் காணப்பட்டது. (ந)


## 'பரமோஸ்' சோதனை வெற்றி

(புதுடில்லி)

'பரமோஸ்' ஏவுக்ணை கோவாவில் வெற்றிகரமாக நேறறுமுன்தினம் பரிசோதிக்கப்பட்டது.

இந்தியக் கடற்படையில் பயன்படுத்துவதற்காக பரமோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது. கோவா அருகே இந்த ஏவுகணை வெற்றிகரமாக நேற்றுமுன்தினம் பரிசோதிக்கப்பட்டது.

கடற்படைக்கப்பலில் இருந்து இவ் ஏவுகணை செலுத்தப்பட்டது. 290 கிலோ மீற்றர் தூரம் பாயக்கூடிய அது, இலகைகை வெற்றிகரமாகத் தாக்கி அழித்தது. ஏற்கனவே இது ஒன்பது முறை பரிசோதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)



ஈராக்கில் கார்க் குண்டு வெடிப்புகள் தொடர்கதையாகி வருகிறது. கடந்த வியாழன் அன்று இரண்டு கார்களில் குண்டு வெடித்ததில் 18 பேர் பலியாயினர். 30 பேர் படுகாயமடைந்தனர். குண்டு வெடித்த இடத்தை ஊழியர் ஒருவர் சுத்தம் செய்கிறார்.

## சிங்கப்பூருக்கும் ஜெட்!

(சிங்கப்பூர்)

தனியார் விமானப் போக்குவரத்து நிறுவனமான 'ஜெட் ஏர்வேஸ்' சிங்கப்பூருகவு முதல் முறையாக நேற்றுமுன்தினம் விமானத்தை இயக்கியது.

இந்தியாவைச் சேர்ந்த தனியார் விமானப் போக்குவரத்து நிறுவனமான 'ஜெட் ஏர்வேஸ்' நேபாளம் (காத்மண்டு), இலங்கை (கொழும்பு) ஆகிய நாடுகளுக்கு வமானங்களை இயக்கி வருகிறது. முதல் முறையாக நேற்றுமுன்தினம் முதல் சிங்கப்பூருக்கும் விமானம் இயக்கியது. 60 பயணிகளுடன் சென்ற ஜெட் ஏர்வெஸ்சின் 737 - 800 போயிங் விமானம், சாங்கி விமான நிலையத்தில் தரையிறங்கியது.

இந்த விமானம் மும்பையில் இருந்து புறப்பட்டது. நிறுவனத்தின் தலைமை அதிகாரி பீட்டர் யுதியும் விமானத்தில் சென்றார். (ந)

## போப் பதவியை மறுத்தவர்

போப் பதவி ஒரு நாட்டின் அதிபருக்கு இணையான பதவி. அத்துடன், மிக கௌரவம வாய்ந்த பதவியும் கூட. 110 கோடி கத்தோலிக்கர்களின் தலைவர். இவர் சொல்வதுதான் அவர்களுக்குச் சட்டம். தவிர, ரோம் நகர பிஷப்பும் போப்தான்.

கௌரவமும், அதிகாரமும் ஒரு சேர கொண்ட இந்தப் பதவியை வேண்டாம என்று யாராவது சொல்வார்களா? இதற்கு முன் சிலர் அப்படி மறுத்திருக்கிறாாகள்.

வத்திக்கானில் 'தேர்தல் முடிவில் யாராவது ஒருவர் அதிக வாக்குகளைப் பெற்று போப் ஆகத் தேர்வு பெற்றுவிட்டால், கர்தினால் குழுவின் தலைவர் அவரிடம் சென்று, 'நீங்கள் போப் ஆக சம்மதமா?' என்று கேட்பார். அதற்கு அவரும்... ஆம்... என்று சொல்லவேண்டும். அந்த வார்த்தையைக் கேட்டதும் அடுத்துச் செய்ய வேண்டியது, விழாக்களுக்கான ஏற்பாடுகள்தான்.

1271இல் 'செயின்ட் பிலிப் பெனிஸி' போப் ஆகத் தேர்வு பெற்றார். ஆனால், பதவியேற்க அவருக்கு விருப்பம் இல்லை. பதவியில் அமர்த்த எல்லோரும் முயற்சி செய்தபோது திடீரெனக் காணாமல் போய்விட்டார். இதனால் இன்னொருவரைப் போப் ஆகத் தேர்வு செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சார்லஸ் பொரோமியோ எனும் கர்தினாலும் போப்பாகப் பதவியேற்க மறுத்துவிட்டார்.

1978இல் மிலன் நகர பிஷப் ஆக இருந்த 76வயது கர்தினால் 'ஜியோவானி கொலாம் போ'வை பல கர்தினால்கள் போப் ஆகவேண்டும் என்று தேர்வு செய்தனர். ஆனால் அவர், தன்னைப் போப் ஆகத் தேர்வு செய்தால், ஒருபோதும பதவி ஏற்கமாட்டேன் என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டார். அவர் அன்று ஆம் என்று சொல்லியிருந்தால் அவர் போப் ஆகப் பதவியேற்றிருக்கலாம். உண்மையான துறவு என்பது எதிலும் ஆசைப்படாததுதான்.

ஜியோவானி பதவியேற்காதது வரலாற்றில் நிலைத்துவிட்டது. வத்திக்கான் வரலாற்றையும் மாற்றிவிட்டது. (ந)

# தீவிரவாதிகள் அச்சுறுத்தலின் எதிரொலி சிங்கப்பூரில் பாதுகாப்பு அதிகரிப்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் உள்ள அனைத்துச் சுரங்க ரயில் நிலையங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்த அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

ஈராக்கில் அமெரிக்கா போர் தொடுத்தபோது, சிங்கப்பூர் பல உதவிகளை அமெரிக்காவுக்குச் செய்தது. இதனால், கோபமடைந்த ஜெம்மா இஸ்லாமியா தீவிரவாதக் குழு சிங்கப்பூரில் பல்வேறு தீவிரவாத நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

சிங்கப்பூர் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கக்கூடிய நிறுவனங்களைத் தாக்கி அழிக்க 2001ஆம் ஆண்டு தீவிரவாதிகள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது. இந்த அமைப்பு ஒசாமா பின் லேடனின் அல் -கெய்டா அமைப்புடன் நெருங்கிய தொடாபு வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களை முறியடிக்க நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள 51 சுரங்க ரயில் நிலையங்களில் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களுடன் ஆயுதம் ஏந்திய பொலிஸாரையும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த சிங்கப்பூர் அரசு முடிவு செய்துள்ளது. பொலிஸாருக்குக் குண்டு துளைக்காத ஆடைகள் மற்றும் துப்பாக்கிகள் வழங்குவது குறித்தும் யோசித்து வருகிறது.

தீவிரவாதிகள் நச்சு மற்றும் விஷ வாயுக்களைப் பரப்பினால் குறைந்தது 5 மணி நேரத்திற்கு உடலில் புகாதவாறு தடுக்க சிறப்பு முகமூடிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பொலிஸ் ரோந்து வாகனங்களில் சிறப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இத்தகவலைச் சிங்கப்பூர் பொலிஸ் தகவல் தொடர்பாளர் வெளியிட்டுள்ளார். (ந)

## அமெரிக்கர்களை கவர்ந்த அமிதாப்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 12நாட்கள் நடைபெறவுள்ள திரைப்பட விழாவில், பங்கேற்பதற்கா பாலிவுட் நடிகர் "அமிதாப் பச்சன் நியூயோர்க் சென்றுள்ளார். அங்கு யூனிசெப் நிறுவனம் அவருக்கு வரவேற்பு விழா நடத்தியது. இந்த விழாவில் யூனிசெப் விருது அவருக்கு வழங்கப்பட்டது.

இது தவிர யூனிசெப்பின் நல்லெண்ணத் தூதராகவும் பச்சன் நியமிக்கப்பட்டார். யூனிசெப் சார்பில் அவர் எய்ட்ஸ் மற்றும் போலியோ குறித்த விழிப்புணர்வுப் பிரசாரத்திலும் ஈடுபடவுள்ளார். இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்திருந்த அனைவரும் அமிதாப்பச்சனின் பேச்சு மற்றும் நடவடிக்கைகளால் மிகவும் கவர்ந்திழுக்கப்பட்டனர். (ந)



# இலங்கை அரசியலில் விஜேவீர முதல் வீரவன்ஸ வரை

ஜனதா விமுக்கி பெரமுனவை ஒரு இடதுசாரிக் கட்சியாக மட்டுமன்றி ஒரு மாக்ஸியக் கட்சியாகவும் காட்டுவதில் அந்தக் கட்சிக்கும் இல்லாத அளவு அக்கறை மாக்ஸிய விரோதிகளிடம் இருக்கிறது. தீவிர யு,.என்.பி ஆதரவு ஏடான கண்டே லீடர் போன்றவை மிகக் கவனமாக ஜே.வி.பியை ஒரு மாக்ஸியப் புரட்சிகர இயக்கம் என்றே குறிப்பிட்டு வருகிறது. சண்டே ரைம்ஸ் போன்ற முதலாளித்துவ ஏடுகளில் பல வலதுசாரிப் பக்தி எழுத்தாளர்களும் அதே நோக்குடன் ஜே.வி.பியை ஒரு மாக்ஸிய அமைப்பாகச் சித்தரித்து வருகின்றன. தமிழ் பத்திரிகைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கை இடது சாரி இயக்கத்தின் வரலாற்றின் முக்கியமான பகுதியான அதன் வளர்ச்சியையும் உச்ச நிலையையும் அடையாளப்படுத்திய காலம் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகவும் சமூக நீதிக்காகவும் அது துணிந்து நின்ற காலமேயாகும்.

பாராளுமன்றச் சேற்றில் சமசமாஜக் கட்சியும் சோவியத் சார்பு கம்யு,னிஸ்ட்டுகள் எனப்பட்ட திரிபுவாதக் கட்சியும் அழிந்து, சில ஆண்டுகளின் பின்னரே பேரினவாதத்துடன் அவை சமரசம் செய்தன. நேர்மையான இடது சாரிகள் ஏகாதிபத்திய எதிர்ப்பு, சமூக நீதி இனங்களிடையிலான சமத்துவம் ஆகிய விடயங்களில் என்றுமே விட்டுக் கொடுத்தவர்களல்லர். இது வலது சாரிப்பத்திரிகையாளர்களும் வலிந்து இடது சாரிகளைத் தாக்குகிற எழுத்தாளர்களும் அறியாததல்ல.

## இடதுசாரிகளைத் தனிமைப்படுத்த மாக்ஸிய விரோதிகள் முயற்சி



இடது சாரிகளை எப்படி அடையாளப்படுத்தினால் அவர்களை மக்களிடமிருந்து தனிமைப்படுத்த இயலுமோ அப்படியெல்லாம் அவர்களை அடையாளப்படுத்துவதில் மாக்ஸிய விரோதிகள் கண்ணுங்கருத்துமாக இருந்து வந்திருக்கின்றார்கள். ஒரு காலத்தில் தமிழ் மக்களிடம் பாராளுமன்ற இடதுசாரிகளைக் காட்டி, இப்படிப்பட்டவர்களே இடதுசாரிகள் என்று தமிழ்த் தேசியவாதிகள் பிரசாரம் செய்தனர்.

குறிப்பாகத் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையை வைத்துப் பாராளுமன்ற ஆசனங்களைப் பெற விரும்புபவர்களுக்கு இது மிகவும் தேவைப்பட்டது. தமிழ்த் தேசியவாதத்தின் பேரால் பிழைப்பு நடத்துகிற சில விஷமிகளுக்கு இப்போது ஜே.வி.பி.மிகவும் வசதியான ஒரு அமைப்பாகிவிட்டது. ஜே.வி.பி என்பது குறுகிய தேசியவாத நோக்கங்களையும் சிறு முதலாழிய பார்வையையும் கொண்ட அமைப்பு என்பது 1969-70 அளவிலேயே மாக்ஸிய லெனினியவாதிகளால் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்ட விடயம்.

## சிங்களப் பெரும்பான்மையை தளமாகக் கொண்ட கட்சி

1980களில் எந்த விதமாகச் சில தமிழ்த் தேசியப் போராளிகளின் அமைப்புக்கள் தம்மை மாக்ஸியவாதிகள் என்று கூறிக்கொண்டனவோ, அந்தவிதமாகவே ஜே.வி.பியும் தன்னை அறிமுகப்படுத்தியது. மேலோட்டமான முறையில் சில சுலோகங்களை முன்னிறுத்தி ஒரு விதமான மாக்ஸிய ஆய்வோ அணுகுமுறையோ இல்லாமற் சிங்களப் பேரினவாதத்துக்கு மாக்ஸிய முகத்திரை அணிவித்ததன் மூலம் ஜே.வி.பி. விரக்தியடைந்த சிங்கள வாலிபர்களைக் கவர முற்பட்டது.

அதன் தலைவரான விஜேவீர, தோழர் சண்முகதாசன் தலைமையிலான மார்க்ஸிய லெனினிசக் கம்யு,னிஸ்ற் கட்சியில் நுழைந்து, பேரினவாத நோக்கில் செயற்பட்டு, 1966ஆம் ஆண்டு பேரினவாத ஊர்வலத்தில் பங்கு பற்றியதற்காகக் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட வராவார். கட்சிக்குள்ளிருந்த சில இளைஞர்கள் அவரால் தவறாக வழி நடத்தப்பட்டு அவருடன் போனார்கள். சோவியத் சார்பு கம்யு,னற்ஸ் கட்சிப் பின்னணியையுடைய மஹிந்த விஜேசேகர போன்றவர்களும் அவருடன் இணைந்தனர்.

மாக்ஸியம் பற்றிய ஜே.வி.பியின் அணுகுமுறையை விளங்கிக்கொள்வதென்றால், அவர்கள் எப்படி ஐந்தே விரிவுரைகளில் இலங்கையின் வரலாறு, பொருளாதாரம் என்பவற்றையும் மாக்ஸியத்தையும் கற்பித்தார்கள் என்பதிலிருந்தே விளங்கிக்கொள்ளலாம். 1960 களில் எழுச்சி பெற்ற இந்திய விஸ்தரிப்புவாதம் பற்றித் தோழர் சண்முகதாஸன் மூலம் அறிந்த ஜே.வி.பி தலைவர் விஜேவீர, அதே கருத்தை திரித்து மலையகத் தமிழர்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கரங்கள் என்று விளக்கினார். அவர்களின் ஐந்து விரிவுரைகளில் இந்திய விஸ்தரிப்பு வாதம் என்பது ஒன்றாகும்.

ஜே.வி.பியின் வேலைத்திட்டமும் அரசியற் பணிகளும் முற்றுமுழுதாகச் சிங்களப் பெரும்பான்மை மக்களை மட்டுமே தளமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டது. மக்கள் யுத்தம், வெகுசன அரசியல், தொழிலாளி வர்த்தகத் தலைமை என்பவற்றை முற்றாகவே நிராகரித்த ஜே.வி.பி.

லத்தின் அமெரிக்காவில் சேகுவேரா பயன்படுத்திய தந்திரோபாயத்தைப் பயன்படுத்தப் போவதாகக் கூறிக்கொணடு ஆயுதமேந்திய குழுக்கள் மூலம் அரச அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்று கனவு கண்டது. குவேராவின் இன, மத, தேசிய வேறுபாடு கடந்த உலக நோக்கை மட்டும் ஜே.வி.பி. அறிய விரும்பவில்லை.

1970 தரப்படுத்தலை ஜே.வி.பி. கண்டிக்க மறுத்ததும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும். ஜே.வி.பி. பற்றிய கவர்ச்சி ஒரு சில தமிழ் இளைஞர்களிடம் இருந்த போதும், ஜே.வி.பி. தமிழ்ச் சமூகத்தின் பொதுவான பிரச்சினைகள் பற்றியோ அதற்குள்ளான சமூக ஒழுங்குமுறைகள் பற்றியோ என்றும் அக்கறை காட்டவில்லை.

எனினும், சில தமிழ் மாக்ஸிய விரோதங்கள் ஜே.வி.பி.யினரையே உண்மையான மாக்ஸியப் புரட்சிவாதிகளாக அன்றும் இன்றுங்கூடக் காட்டமுயல்வதன் நோக்கத்தை நாம் அறிவது கடினமில்லை.

ஜே.வி.பியின் 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் தோல்விக்கு அதன் தொழிலாளிவர்க்க விரோத நிலைப்பாடு, வெகுசன அரசியலை மறுத்து ஆயுதக் குழுக்களின் அரசியலை வற்புறுத்தியது. அரச இயந்திரம் பற்றிய தெளிவீனம் போன்ற பல காரணங்களைக் கூறலாம். இவை எல்லாமே மாக்ஸியத்தை அறிய விரும்பாமல் ஜனரஞ்சக அரசியலை மாக்ஸியத்தின் பேரால் முன்னெடுத்ததன் விளைவுகள் தாம்.

1960 களில் பாராளுமன்ற இடதுசாரிகளின் துரோகங்களும் தென்னிலங்கையின் இளைஞர்களிடையே மாக்ஸிய அறிவும் வாசிப்பும் போதாமலிருந்ததும் ஜே.வி.பிக்கு வசதியாகிவிட்டது.

ஜே.வி.பியின் தலைமையில் லயனல் போப்பகே போன்று ஓரளவு மாக்ஸியத் தெளிவுள்ளவர்கள் இருந்தாலும் அவர்களும் விஜேவீரவின் இனவாத அரசியலை அனுசரித்தே நடந்தனர்.

## 1971 கிளர்ச்சியின் பின் சிதறுண்ட ஜே.வி.பி.

1971 கிளர்ச்சியின் தோல்வியின் பின்பு பழைய தலைமையிற் பெரும் பகுதி ஜே.வி.பி.யினின்று விலகிவிட்டது. பல சிறு குழுக்கள் உருவாயின. எனினும், என்றுமே தன்னை ஒரு மாக்ஸிய- லெனினியக் கட்சியாகவோ வெகுசன இயக்கமாகவோ உருவாக்கிக் கொள்ளவில்லை. இதனால் ஜே.வி. பிக்குப் பின்னால் அணி திரண்ட பல நல்ல சக்திகள் சிதறடிக்கப்பட்டன.

1977 க்குப் பின்பான ஜே.வி.பியின் அடுத்த வளர்ச்சிக்கு ஜே.ஆர். ஜயவர்த்தனவும் பாலாதம்பு என்கிற முன்னாள் ட்றொட்ஸ்கிய தொழிற்சங்கவாதியும் மிகவும் உதவினர்.

யு,.என்.பியின் அரசியல் எதிரிகளின் கூட்டங்களைக் குழப்புவதற்கு ஜே.வி.பியின் குண்டர் படைகள் பயன்பட்டன. பாராளுமன்ற இடதுசாரிகளோ, ஸ்ரீ.சு.கட்சியோ பெரிய பொதுக்கூட்டம் எதையும் நடத்த இயலாதவிதமாகச் ஜே.வி.பி.யினர் யு,.என்.பி. அரசாங்கத்தின் ஆசியுடனும் அனுசரணையுடனும் கூட்டங்களில் குழப்பம் விளைவித்தனர்.

## யு.என்.பியின் குண்டர்களாக விளங்கிய ஜே.வி.பியினர்

ஜே.வி.பி-யு,.என்.பி ஒத்துழைப்பு 1980 க்குப் பின்பு பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியது. யு,.என்.பி. ஆட்சி ஜே.வி.பியை மேலும் வளர விடாமல் மறிப்பதில் கவனங்காட்டியது. அதேவேளை ஜே.வி.பி தனக்கொன ஒரு புதிய அரசியல் தளத்தை விரிவுபடுத்தத் தொடங்கியது. ஸ்ரீ.சு.கட்சி பாராளுமன்ற இடதுசாரிகள் போன்றோரின் நலிவு ஜே.வி.பிக்குச் சாதகமாக இருந்தது. எனினும் ஜே.வி.பி.தனது பேரினவாத அரசியலைக் கைவிடுவதாக இல்லை. றோஹண விஜேவீர 1982 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போது, யாழ்ப்பாணஞ் சென்று தமிழீழத்தை ஏற்பதாகச் சொல்லித் தமிழ் மக்களது வாக்குகளைப் பெறலாம் என்று நினைத்திருந்தார். ஆனால் அவரது உரை தென்னிலங்கை ஊடகங்களில் வெளியான உடனேயே தான் உயிருடன் உள்ளவரை பிரிவினையை ஏற்கமாட்டேன் என்று பிரகடனம் செய்தார். இந்த விதமான ஏமாற்றை ஜே.வி.பி. உண்மையில் தமிழ் மக்களது சுயநிர்ணயத்தை என்றுமே மதிக்கவில்லை. தேசிய இனப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு பற்றி 1980 களின் நடுப்பகுதியில் லயன் போப்பகே முன்வைத்த ஆலோசனைகள் ஜே.வி.பியின் தலைமையால் மறுக்கப்பட்டன. போப்பகே அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டார்.

## ஜே.வி.பியின் பலமுக நோக்கு

1983க்குப் பின்பான இன ஒழிப்புப் போரும் விடுதலைப் போராட்டச் சூழலும் ஜே.வி.பியின் வெவ்வேறு முகங்களைக் காட்டின. புளொட் போன்ற அமைப்புக்களுடைய அனுசரணையுடன் ஜே.வி.பி. இந்தியாவில் தனது உறுப்பினர்கட்கு ஆயுதப் பயிற்சி வழங்குவித்ததாகவும் அக்காலத்திற் கூறப்பட்டது. எனினும் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு வழங்கப்படுவதை ஜே.வி.பி ஏற்க ஆயத்தமாக இருக்கவில்லை. 1987 ல் இந்திய-இலங்கை உடன்படிக்கை ஏற்பட்ட போது ஜே.வி.பி அதை எதிர்த்தது. அந்த எதிர்ப்பில் இந்தியா, இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கையின் இறைமைக்குப் பங்கமாக விதித்த நிபந்தனைகள் எதைப் பற்றியும் ஜே.வி.பி பேசவில்லை. வடக்கு-கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டதையே ஜே.வி.பி வன்மையாக எதிர்த்தது. 1987 முதல் 1989 வரை ஜே.வி.பி தன்னை ஒரு பச்சை இனவாதக் கட்சியாக அடையாளங்காட்டியது. அதன் வெகுசன அமைப்பான டி.ஜே.வி (தேசபக்த மக்கள் இயக்கம்) மூலம் பல அரசியற் படுகொலைகளை நடத்தியது. இக் காலகட்டத்தில் ஜே.வி.பி தீவிரமான இந்திய விரோத அரசியலை முன்னெடுத்துக் கவனிக்கவேண்டிய விடயமாகும். இக்கால கட்டத்தில் ஜே.வி.பி எந்த வகையிலும் தனது செயல்களிலோ அறிக்கைகளிலோ எவ்விதமான மாக்ஸிய அடையாளத்தையும் காட்டிக் கொள்ளவில்லை.

## பிரேமதாசவின் நடவடிக்கையும் ஜே.வி.பியின் வீழ்ச்சியும்

1989 இல் பிரேமதாச ஜனாதிபதியான பிறகு எடுத்த மனிதாபிமானமற்ற கடும் நடவடிக்கைகளின் விளைவாக ஜே.வி.பி பெரும் அழிவைச் சந்தித்ததுடன் விஜேவீர உட்பட சோமவன்ஸ என்பவர் தவிர்ந்த முழு ஜே.வி.பி தலைமைப்பீடமும் கொன்றொழிக்கப்பட்டது. 1994ல் யு,.என்.பீ.ஆட்சி மக்களால் அகற்றப்பட்ட பின்பு மீளக்கட்டியெழுப்பப்பட்ட கட்சியானது 1971 கிளர்ச்சியுடன் தொடர்பற்ற 1987-89 கால கட்டத்தில் கட்சியின் கீழ் நிலையில் இருந்திருகக்க் கூடியவர்களைக் கொண்ட ஒரு தலைமையையே



கொண்டிருந்தது. அதற்குள் பேரளவில் மாக்ஸியம் பேசுகிற ஒரு சிலர் இருந்தாலும், அடிப்படையில் அதன் நிலைப்பாடு சிங்களப் பேரினவாதம் சார்ந்ததே. இரண்டு முதலாளியக் கட்சிகளும் ஊக்குவித்து வளர்த்த பேரினவாத அரசியல் தனக்கு ஆதாயம்தேடுவதற்கும் பேரின வாதத்தை மேலும் வளர்ப்பதற்கும் ஜே.வி.பிதிட்டமிட்டுச் செயலாற்றத் தொடங்கியது. எனினும் வக்கிரம பாகு கருணா ரத்ன என்ற ட்றொட்ஸ்கிவாதி ஜே.வி.பியின் பேரினவாதம் திருத்தப்படக் கூடியது என்றும் ஜே.வி.பிக்குள் ஒரு மாக்ஸியத் தளம் உள்ளது என்றும் வாதித்தார். ஜே.வி.பி யைப் பயன்படுத்தித் தனக்கு ஒரு

**—— நன்றி: புதிய பூமி ——**

பாராளுமன்ற ஆசனத்தை வெல்லுகிற கனவு 1994ல் தோல்வி கண்டதும் போதாமல் அவரது பதவி ஆசையைப் பயன்படுத்தி ஜே. வி.பி புதிய இடதுசாரி முன்னணியை அவரைக் கொண்டே சிதைப்பித்தது.


## ஜே.வி.பியின் இலட்சியம்

ஜே.வி.பி. என்றுமே இடது சாரி ஒற்றுமையை வற்புறுத்திய கட்சியல்ல. மாக்ஸியத் தலைமைகள் ஓரங்கட்டி இடது சாரித் தோற்றத்துடன் பேரினவாத அரசியலை முன்னெடுத்துப் பாராளுமன்ற அதிகாரத்தைப் பிடிப்பதே 1977க்குப் பின்பான அதன் இலக்காக இருந்தது.

1994இல் தேர்தலில் வெற்றி பெற்ற பொதுசன முன்னணியின் தவறுகளால் தேசிய இனப்பிரச்சினை மேலும் மோசமாகியது. 1999இல் இடதுசாரி ஒற்றுமையையும் போர் எதிர்ப்பையும் முன்னெடுத்து இடதுசாரி இயக்கத்தை மீள வலுப்படுத்தும் முயற்சிகட்கு விக்கிரமபாகு கருணாரத்ன மூலம் ஜே.வி.பி ஆப்பு வைத்த பிறகு யு,.என்.பிக்கும் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கும் மாற்றான மூன்றாவது பெரிய சக்தியாக ஜே.வி.பி தன்னை அடையாளப்படுத்திக் கொண்டது. இக்கால இடைவெளியில் நடுத்தர வர்க்கத்தினரிடம் வலுப்பெற்று வந்த தீவிர சிங்களப் பேரினவாதத்தை அரசியலாக முன்னெடுக்கும் அமைப்பாக சிஹல உறுமய உருவானது.

அப்போது ஒரு மாக்ஸியக்கட்சி சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து நின்றிருக்கும். ஆனால் ஜே.வி.பியோ நேர்மாறான திசையிற் சென்று சிஹல உறுமயவை மீறிய பேரினவாதக் கட்சியாக தன்னை அடையாளப்படுத்த முற்பட்டது.


(தொடரும்)



சந்திரமுகி
ரஜினி - நயன்தாரா

# 'மும்பை எக்ஸ்பிரஸ்' ரஜினிக்கு சவாலாக இருக்கும் -கமல்ஹாசன்

கமலஹாசனும், ரஜினியும் திரைப்படத்துறையில் எதிர் எதிர் துருவங்களாக இருந்தாலும் இருவரும் நல்ல நண்பர்கள். புத்தாண்டு தினத்தில் இருவர் நடித்த படங்களும் ஒரே நேரத்தில் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ரஜினிக்கும் தனக்கும் உள்ள நட்புப் பற்றி கமலஹாசன் வார இதழ ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் பரபரப்பான தகவல்களைத் தெரிவித்துள்ளார். அது வருமாறு:-



ரஜனி, சிவாஜிராவாக இருந்தபோது எனக்கு ராஜன் என்ற நண்பர் இருநதார். அவர் ஒரு கான்சர் நோயாளி. 'அபூர்வ ராகங்கள்' படத்தில் ரஜினி அறிமுகமானது ஒரு கான்சர் நோயாளியாக. ஒருநாள் நான் மேக்கப் அறையில் இருந்தேன். அப்போது கதவைத் திறந்துகொண்டு வேகமாக வந்த ரஜினி 'குட்மானிங் கமல் சார்' என்று சொல்லிவிட்டு மின்னல் வேகத்தில் சென்றுவிட்டார். இதற்கிடையில் எனது நண்பர் ராஜன் மறைந்துவிட்டதால் அந்த இடத்தில ரஜினியை வைத்துக்கொண்டேன். இப்படித்தான் எங்கள் நட்புத் தொடங்கியது.

அதன்பிறகு நானும் ரஜினியும் இணைந்து நிறையப் படங்களில் நடித்தோம். 'நினைத்தாலே இனிக்கும்' படத்திற்காகச் சிங்கப்பூர் சென்றிருந்தபோது டைரக்டருக்குத் தெரியாமல் இரவெல்லாம் சிங்கப்பூரைச் சேர்ந்து சுற்றிவிட்டு அதிகாலையில் ஹோட்டலுக்குள் சென்று ஒழிந்துகொள்வோம். காலையில் தூக்க கலக்கத்தில் இருப்போம். ஒருவர் தோள்மீது ஒருவர் தூங்குவோம். அது இன்றைக்கும் தொடர்கிறது. சமீபத்தில் நாங்கள் இருவரும் அன்று சுற்றியதைப் போன்று ஊர் சுற்றினோம். சத்தம் போட்டு சினிமா பாட்டெல்லாம் பாடி ஒருவருக்கொருவர் கலாட்டா செய்து விளையாடினோம். இதனை நம்பமுடிகிறதா? ஆனால் உண்மை. கடவுள் நம்பிக்கையில், வாழ்க்கை முறையில், செய்கிற படங்களில் தேர்ந்தெடுக்கிற கதைகளில், பொழுதுபோக்குகளில் என நானும், ரஜினியும் அப்படியே வேறு வேறு ரசனைகளும், விருப்பங்களும், தேர்வுகளும் கொண்டவர்கள். அதுபற்றிப் பேசும்போது இருவருக்கும் கருத்து வேறுபாடுகளும் வந்ததுண்டு. ஒரு விஷயத்தில் மட்டும் இருவருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. அது செய்யும் தொழிலான சினிமா பற்றிய பயம். ரஜனி தான் நடிக்கும் ஒவ்வொரு படத்தையும இதுதான் என் முதல் படம் என்ற பயபக்தியுடன் கவனமெடுத்து செய்வார். நானோ இதுதான் கடைசி படம் என்கிற வெறியுடனும் வேகத்துடனும் செய்வேன். இப்போது சந்திரமுகியும், மும்பை எக்ஸ்பிரசும் ஒரேநாளில் வெளியாகியிருக்கிறது.

தியேட்டர்களில் நாங்கள் போட்டியாளர்கள்தான். ஆனால் தனிப்பட்ட முறையில் மிக நெருங்கிய நண்பர்கள். அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி ஒரே துறையில் கடுமையாக மோதும் இரண்டு போட்டியாளர்கள். வேலைக்கு வெளியே தனிப்பட்ட முறையில் பரஸ்பரம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதை எங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த விஷயத்தில் நாங்கள் இருவருமே முன்னுதாரணங்கள். தொழில் மோதல் என்பது எங்கள் இருவருக்குமே சந்தோஷம் தருகிற விஷயம்.

அவர் 'பாயும் புலி' என்றால் நான் 'சகலகலா வல்லவன்' எங்களின் ரசிகர்களுக்கும் அதுதான் விருந்து. 'சந்திரமுகி' எனக்கு நிச்சயமாக சவாலான படம்தான். அதேபோல 'மும்பை எக்ஸபிரஸ்' ரஜினிக்கு சவாலான படம்தான், இந்தப் போட்டிதான் எங்களை இந்த உயரத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. அதேநேரம் ரஜினி படம் நன்றாக இருந்தால் ஒரு ரசிகனா விசிலடிப்பதில் எனக்கு சங்கோஜம் இல்லை. நான் நன்றாக செயதிருந்தால் ரஜினியும் கைதட்டி ரசிப்பார் இது முட்டி மோதுகிற சவால் இல்லை. ஜாலியான சவால் இவ்வாறு கமல் கூறியுள்ளார்.

# சினிமாச் சிதறல்

'கனா கண்டேன்' படத்தில் இரண்டு கதாநாயகர்களில் ஒருவராக நடிக்கும் பிரித்விராஜ், தாய்மொழியான மலையாளத்திலும் பல படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். தற்போது அவரது ஜோடியாக ஒரு மலையாளப் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் தியா.

* * *

'சின்னா' படத்தில் அர்ஜுன் ஜோடியாக நடிக்கும் சினேகா, மீண்டும் அர்ஜுன் நடித்து இயக்கும் 'மதராஸி' படத்தில் அவரது ஜோடியாக நடிகக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.



# வில்லன் பவன்

'ஜீ' படத்தில் அஜீத்துடன் கல்லூரி மாணவர் தலைவர் தேர்தலில் நேருக்கு நேர் மோதி ஜெயித்துக் காட்டுபவராகச் சிறப்பாக நடித்தவர், புது வில்லன் பவன். சென்னை வாழ் இளைஞரான அவருக்குப் பத்தாவது படிக்கும் போதே நடிப்பு ஆசை தொற்றிக்கொள்ள, பல வருடங்கள் சினிமா வாய்ப்புக் கேட்டுப் போராடினார். அதன பலனாக என்.லிங்குசாமி இயக்கத்தில் 'ஜி'யில் சரண்ராஜ் எம்.எல்.ஏயின் மகனாக நடித்தார்.

'ஜி'படத்தைப் பார்த்து ரசித்த் இளம் கல்லூரி மாணவிகள சிலர், இவரைப் பார்த்துவிட்டு, 'கலக்கிட்டேம்மா' என்று பறக்கும் முத்தம் கொடுத்தனராம். இதுவே எனக்கு விருது வாங்கிய மாதிரி இருந்தது என்ற பவன், லோகித்தாஸ் இயக்கத்தில் பிரசன்னா, மீராஜாஸ்மின் நடிக்கும் 'கஸ்தூரிமான்' படத்தில் வில்லனாக நடிக்கிறார்.



'கள்வனின் காதலி'
எஸ்.ஜே.சூர்யா
- நயன்தாரா

# தனுஷ் நடிக்கும் 'திருடன் போலீஸ்'

'துள்ளுவதோ இளமை', 'காதல் கொண்டேன்' ஆகிய வெற்றிப் படங்களைத் தயாரித்த ஆர்.கே. புரொடக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பில் எட்டு கோடி ரூபாய் செலவில் பிரமாண்டமான முறையில் தயாராகும் படம் 'திருடன் போலீஸ்'.

இதில் தனுஷ் கதாநாயகனாக நடிக்கிறார். அவரது ஜோடியாக மும்பை அழகி ஒருவர் அறிமுகமாகிறார்.

இந்தப் படத்துக்கு பிரபல இயக்குனர் செல்வராகவன் கதை, திரைக்கதை, வசனம் எழுதுகிறார். ஒளிப்பதிவு செய்து அரவிந்த் கிருஷணா இயக்குனராக அறிமுகமாகிறார்.

இந்தப் படத்தில் வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடிப்பதற்காக தீவிர உடற் பயிற்சி செய்துவரும் தனுஷ், ஜப்பான் நிபுணர்கள் சொல்லித்தரும் புதிய யுக்திகளைக் கையாண்டு சண்டைக் காட்சிகளில் நடிக்கிறார்.

லண்டன், ஆஸ்திரேலியா, ரோம் ஆகிய பகுதிகளில் விரைவில் 'திருடன் போலீஸ்' படப்பிடிப்பு தொடங்கி நடைபெறவுள்ளது.

பின்னணி இசையையும் அனைத்துப் பாடல்களையும் லண்டனில் ஒளப்பதிவு செய்கின்றனர்.

# 'பக்

அரசியல் பிரமுகரும்,
ஜி.காமாட்சி நாயுடு திரைப்
ஜி.கே.சினி மீடியா என்ற அ
மூலம 'பக்கம் 15' என்ற
புதுமுக கதாநாயகன்,
பட நட்சத்திரங்கள் நடிக்கு
கதை, வசனம் எழுதி இயக்

# ஆகாய

இதுவரை வெளிநாட்
அதிகம் கிடைத்தனர். தற்போது
அடித்துள்ளது. இப்பொழுது
ளுக்கும் என்.ஆர்.ஐ தயாரிப்ப

# ரசிகர்கள்

கே.வி.எம். புரொடக்
கத்தில் மும்பை தாதாவாக
யாளப் படம் கேரளாவில மி
ரசிகர்கள் மத்தியில் கரஜ
துள்ளது.

இதில் அவரது ஜோடி
விந்தியா நடித்துள்ளனர். அ
கன், ராஜன் பி.தேவ், ரியா
கரண் மோதும் ஆக்ரோ
ஹைலைட். திரையரங்குகளி
யாக இருந்தாலும் பல்த்த
குள்ள கதாநாயகர்கள் சில
வெளியான அன்று கொச்சி
கரணை ரசிகர்கள் தங்கள்
தியேட்டர் வளாகத்தை

'அவ உன்னையே
வது காதலி' என நண்பர்க
விளையாட்டாக முளைக்கத்
வபரீதமான சூழ்நிலைகளை
புதிய கோணத்தில சொல்
புதுமுகங்கள் நடிக்கும் இந்த



# ‘எத்தனை சிறுமிகளைச் சீரழித்தேன் என ஞாபகமில்லை’

## பொலிஸ் விசாரணையில் ராதாகிருஷ்ணன் பரபரப்புத் தகவல்

(சென்னை)

“எத்தனை சிறுமிகளைச் சீரழித்தேன் என்பது ஞாபகமில்லை. அவர்களை அழைத்து வந்தால் அடையாளம் காட்ட முடியும்” என்று ராதாகிருஷ்ணன் அலட்சியமாகக் கூறியிருபபது பொலிஸாரைத் திகைப்படைய வைத்துள்ளது.

சென்னை, சூளைமேடு சவுராஷ்டிரா நகரைச் சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன். ‘கஸ்டமஸ்’ துறையில் கடத்தல் தடுப்புப் பிரிவு அதிகாரியாகப் பணியாற்றியவர். சிறுமிகளைப் படிக்க வைப்பதாகச் சென்னைக்கு அழைத்துச் சென்று அவர்களை ‘செக்ஸ்’ கொடுமை செய்த புகாரின் பேரில் ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டார்.

அவரை ஆயிரம்விளக்கு அனைத்து மகளிர் பொலிஸார் காவலில் எடுத்து விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணையில் தான், ராதாகிருஷ்ணன் ஏற்கனவே ராஜீவ் கொலை வழக்கிலும் சிக்கிய விவரங்கள் வெளியே வந்தன. ராதாகிருஷ்ணனை விசாரித்த போது, பொலிஸாரிடம் வெகு அலட்சியமாகவே நடந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

எத்தனை சிறுமிகளை இதைப் போல சீரழித்தாய் என்று பொலிஸார் கேட்ட போது, ராதாகிருஷ்ணன் கூறிய பதில் பொலிஸாருக்கு திகைப்பை ஏற்படுத்தியது வாணியம்பாடி அருகேயுள்ள கிராமத்தில் இருக்கும் சிறுமிகளைத்தத்து எடுக்கவே இல்லை. சில சிறுமிகளைப் படிக்க வைப்பதாகச்சென்னை அழைத்து வந்தேன். சிலரை வேலைக்காக மட்டுமே அழைத்துவந்தேன். எந்தப் பெற்றோரிடமும் தத்து எடுப்பதாகக் கூறவில்லை. பல வருடமாக சிறுமிகளை அழைத்து வந்து கொண்டிருந்ததால், எத்தனை பேர் என்ற எண்ணிக்கை எனக்கு ஞாபகமில்லை. அவர்களை அழைத்து வந்தால், என்னால் அடையாளம் காட்ட முடியும், என்று ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இதுவரை நான்கு சிறுமிகளிடம் இருந்து பொலிஸார் வாக்கு மூலம் வாஙகியுள்ளனர். இதில் ஒருவருக்கு மட்டுமே 16 வயது. மற்ற மூன்று சிறுமகளுக்கும் 14 அல்லது 13 வயது தான் இருக்கும் என்று கூறப்படுகிறது.

பொலிஸ்காவல் முடிந்ததும் நேற்று முன்தினம் மாலை எழும்பூர்கோர்ட்டில ராதாகிருஷ்ணன் ஆஜர்படுத்தப்பட்டார். அவர் கோர்ட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட போது நிருபர்களிடம் கூறியதாவது,

என் மீது வேண்டுமென்றே எனது மனைவி கோமளவல்லி புகார் கொடுத்து இருக்கிறாள. அவள் பொலிஸுக்கு, இரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்து புகாரை விசாரிக்க வைத்திருக்கிறாள். எனக்கும் அவளுக்கும் பிரச்சினை ஏற்படடு இரு வரும் பிரிந்துவிட்டோம்.

அவளது தூண்டுதலால் தான் பொலிஸார் நடவடிக்கை எடுக்கின்றனர். இது தவிர எனது வக்கீலையும் பொலிஸார் மிரட்டுகின்றனர். என் மீது குற்றம் சுமத்த, எனக்குச் சொந்தமான காரில் சிறுமிகளை ஏற்றி வந்தது போல, சொல்லும் படி பொலிஸார் வற்புறுத்துகின்றனர்.

பொலிஸ் காவல் முடிந்து ஆஜர்படுத்தப்பட்ட, ராதாகிருஷ்ணனை மீண்டும் சிறையில் அடைக்குமாறு கோர்ட் உத்தரவிட்டது. இந்த வழக்கு எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ராதாகிருஷ்ணன் பண்ணை வீட்டில் உள்ள படுக்கை அறை சுவரில், முக்கிய அரசு மற்றும் பொலிஸ் அதிகாரிகள், டில்லியைச் சேர்ந்த சில அதிகாரிகளின் தொலைபேசி எண்கள் கம்பியூட்டரில் டைப் செய்யப்பட்டு, ஒட்டப்பட்டுள்ளது. இதை அவரின் பண்ணை வீட்டில் சோதனை நடத்திய தனிப்படைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பட்டியலில உள்ள அதிகாரிகள் மற்றும் பொலிஸாரிடம் தற்போது இரகசியமாக விசாரணை நடந்து வருகிறது. இதனால் வேலூர் மாவட்டத்தில் உள்ள பல அரச மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கலக்கத்தில் உள்ளனர். (ற)

## ஆங்கிலப் பரீட்சையில் 94 வீதமானோர் சித்தி

(பொன்னாலை)

யாழ்- உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் ஆங்கில தேசிய டிப்ளோமா பரீட்சைக்குத் தோற்றியோரில் 94 வீதமான மாணவர்கள் சித்தியடைந்திருக்கின்றனர்.

கடந்த வருடம்நடைபெற்ற ஆங்கில தேசிய டிப்ளோமா இறுதி வருடப் பரீட்சைக்குத் தோற்றியோரே இவ்வாறு சித்தியடைந்திருக்கின்றனர்.

இப்பரீட்சைக்கு மேற்படி நிறுவனத்திலிருந்து 26 மாணவர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-49)

## நிதியுதவி

(பொன்னாலை)

இருதயநோயால் பாதிக்கப்பட்ட சிறுமி ஒருவரின் சத்திரசிகிச்சைக்கான செலவுகளைப் பூர்த்தி செய்வதற்காக யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையினரால் ஒரு இலட்சம் ரூபா நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

மயிலிட்டிப் பகுதியிலிருந்து இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வாழும் கு[illegible]லோனி என்ற சிறுமிக்கே இந் நிதி உதவி வழங்கப்பட்டிருக்கின்றது. (7-49)

# அநாதைச் சிறுவர்களை ஒப்படைக்க விசேட திட்டம்

(கொழும்பு)

ஆழிபபேரலையினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை தியாகப் பெற்றோர் முறையின் கீழ் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கீழ் இதற்கான பொறுப்பை ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளை எஞ்சியுள்ளோர்களால் வளர்க்க முடியாத நிலை ஏற்படும்பேது, அக் குழந்தைகளையும் தத்தெடுக்க விரும்புவோருக்கு வழங்க அதிகார சபை முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக நீதியமைச்சு புதிய சட்டமொன்றை இயற்றவுள்ளது. (ற)



யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்று கடந்த 9 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில், யாழ்.மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காளர் பி.சிவலிங்கம் மங்களவிளக்கேற்றுவதையும், யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சொலமன் சூ.சிறில் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## இராசி பலன்

17.04.2005
(சித்திரை 4, ஞாயிற்றுக்கிழமை)
அட்டமி முற்பகல் 9.44 மணிவரை
[illegible]சம் பின்னிரவு 12.10 மணிவரை
இராகுகாலம் 04.34 - 06.04 மணிவரை
சுபநேரம் 9.04 - 10.34 மணிவரை
சிறிராம நவமி

| | |
|---|---|
| மேடம் | மன்சஞ்சலம், வேலைச்சுமை, உஷ்ண வியாதி, காரியதாமதம். |
| இடபம் | கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, சகோதரர் வழி உதவி, தெய்வதரிசனம். |
| மிதுனம் | பணவிரயம், கோபப்படுதல், காரிய தடங்கள், திடீர் நன்மை. |
| கடகம் | சிந்தனை மிகுதி, தொழில் சிந்தை, பிரயாணம், போசன சுகம். |
| சிங்கம் | சயன சுகக்குறைவு, வாக்கு மேன்மை, சத்துரு ஜெயம், சுபசெலவு. |
| கன்னி | எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வ சிந்தை, உறவினர் வருகை, போசன சுகம். |
| துலாம் | பிரயாணம், சுபநிகழ்வு, தடைப்பட்ட காரியம் கைகூடும், விருந்துபசாரம். |
| விருச்சிகம் | புதிய திட்டமிடல், தந்தை வழி உறவு, நிர்பந்த நிலை, வீண் பயம். |
| தனுசு | காரிய தடங்கல், அபகீர்த்தி, உடல் நலக் குறைவு, நண்பர்கள் விரோதம். |
| மகரம் | களஸ்திர நன்மை, செல்வாக்கு, காரிய அனுகூலம், விருந்துபசாரம். |
| கும்பம் | சத்துரு ஜெயம், பெரியோர் உதவி, காரிய அனுகூலம், தொழில் நன்மை. |
| மீனம் | சொத்துப் பிணக்கு, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், திடீர் நன்மை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
—வளவன்

## சமாதான நீதிவான் நியமனம்

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த சி.பொ.வ.மா.க. முதலியார் அண்மையில் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் திருமதி எஸ்.நந்தசேகரன் முன்னிலையில் யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



இளமைக் காலங்களில் சுதுமலை, தாவடி போன்ற இடங்களில் இயங்கிவந்த சுருட்டுச் சுற்றும் தொழிலாளர் சங்கதின் தலைவராக இருந்து அவர்களின் நல்வாழ்வுக்காக் பாடுபட்டு உழைத்தவர். சிறந்ததொரு தொழிற் சங்கவாதியாகவும். சமூகசேவையாளராகவும் விளங்கி வருகிறார்.

விவசாயத்தில் அதிக ஈடுபாடுகொண்டு உழைத்து வரும் முதலியார் விவசாயிகளுக்கு பல நன்மைகளைப் பெற்றுத்தரும் வகையில் மாணிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தீவிரம்காட்டி வரும் இவர், விவசாயத் திணைக்களத்தால் அறிமுகப் படுத்தப்பட்ட விவசாயிகள் ஓய்வூதியத்திட்டத்தில் சேர்ந்து ஓய்வூதியம் பெற்றுவரும் முதலாவது நபராகவும் விளங்குகிறார்.

விவசாய சேவையைப் பாராட்டி, யாழ்ப்பாண மாவடடத்தின் முதிய விவசாயியாகத் தெரிவு செய்யப்பட்ட முதலியாருக்கு விவசாயக் காணி நீர்ப்பாசன அமைச்சரால் தேசிய விழாவில் பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் அணிவிக்கப்பட்டு ரொக்கப்பரிசும் வழங்கப்பட்டது.

அரசியல் நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடுகாட்டி வரும் இவர் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட உபதலைவர்களுள் ஒருவராகவும் விளங்கிவருகிறார்.

## அரச ஊழியர்களுக்கும் காப்புறுதி வழங்கப்படும்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு கடந்த வருட வரவு செலவுத்திட்டத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய காப்புறுதி முறையை துரிதமாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அரச நிர்வாக அமைச்சு தெரிவிக்கின்றது.

இதற்கமைய அமைச்சரவை பத்திரமொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் அனுமதி கிடைத்தவுடன் அரச ஊழியர்களுக்கான புதிய காப்புறுதி முறை அறிமுகப் படுத்தப்படும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கூட்டமைப்பு அரசாங்கத்தினால் இந்தக் காப்புறுதி முறை முதலாவது வரவு செலவுத்திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)


விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக், ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
T.P: 222 3226


## விவாத அரங்கு - 8

விடயம்

நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம்:

- சீரழிந்துள்ளது.
- சீர்பெற்றுள்ளது.


நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி திரு.சி.சிவநேசன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# போலிக் கௌரவத்திற்காக செய்யும் செயல்கள் எவையும் பயனைத் தராது

நாம் பலவேளைகளில் பிழையான செயல்களைச் செய்துவிட்டு நாம் வெற்றி பெற்றுவிட்டோம் என்று




இறுமாப்புக் கொள்வதுடன் எம்மைப் பற்றிப் பெருமையாகவும் பேசிக் கொள்கின்றோம். ஆனால் எமது மனச்சாட்சி எம்மைக் குற்றவாளிகள் என்பதை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். ஜேம் ஆலன் என்ற அறிஞர் கூறுகின்றார் "உன்னதமான வாழ்விற்கு மனிதன் ஏங்குகிறான். ஆனால் அதற்குரிய மனதை மாற்றத் தயங்குகிறான்" இயேசுவைப் பழிசுமத்திக் கொலை செய்வித்த யூதர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலின் பின்னர் புனித பேதிரு ஆற்றிய உரைக்கு உள்ளம் குத்துண்டவர்களாக "நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று பேதிருவைக் கேட்டார்கள். பலர் மனம் மாறாதவர்களாகவே திரும்பிச் சென்றார்கள். மனம் மாறியவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெற்றார்கள். இவ்வாறு முதல் முறையே மூவாயிரம் பேர் திருமுழுக்கு பெற்றுக் கொண்டு இயேசுவுக்காக வாழத் தம்மை மாற்றிக் கொண்டார்கள்.

## நன்மைக்காகத் துன்புற வேண்டும்

இயேசுவின் வாழ்வு முழுவதுமே

## பரமபிதா காட்டியபாதை

ஒரு நற்செய்தியாகும். நற்செய்திப் போதனைகளின் மொத்த உருவமே இயேசுக்கிறிஸ்து. அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்வதுதான் கிறிஸ்தவர்களுக்குப் பெருமை. பயனற்ற நடத்தைகள் எமக்குப் பலன்தரமாட்டா. "வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை. வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை" (1பேதிரு 2:22) என்று விவிலியம் விளம்புகிறது. குற்றம் செய்ததற்காகப் பொறுமையோடு இருப்பதில் என்ன சிறப்பு? மாறாக நன்மை செய்தும் அதற்காகப் பொறுமையோடு துன்புற்றால் அது கடவுளுக்கு உகந்ததாகும். இயேசு நமக்காகவே அடித்துத் துன்புறுத்தப்பட்டார். அவரது காயங்களாலே நாங்கள் குணமடைந்தோம்.

இயேசுவின் வழியைப் பின்பற்றுகின்றோம் என்று பெருமைப்படும் நாம் எத்தனை சின்னஞ்சிறியவற்றில் பிரமாணிக்க முள்ளவர்களாக இருந்திருக்கிறோம். பயனை எதிர்பாராத எத்தனை காரியங்களை உளமாரச் செய்திருக்கின்றோம். நீதி, நியாயமான செயல்களுக்குக் கூடக் கையூட்டுப் பெறாமல் செய்திருக்கின்றோம்? உண்மையான ஏழையை உதாசீனம் செய்திருக்கின்றோம்.

### நேரிய வழிகாட்டிகள்

போலிக் கௌரவத்திற்காகச் செய்கின்ற நேர்த்தியான செயல்கள் கூட பொருளற்றவைகள் ஆகின்றன. பிழையான வழிகாட்டல்களை எமது சமுதாயத்துக்குக் காட்டவே கூடாது. பிழையானவைகள் சரியான பாதைக்கு இட்டுச் செல்லாது. அது மீண்டும் மீண்டும் பிழையானவற்றுக்கே தவறிச் செல்லும். இன்பம் வந்தாலும், துன்பம் வந்தாலும் சரியான வழிநடத்தலையே ஏற்றுக் கொண்டு வாழும் போது நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. இயேசு தாமே கூறுகின்றார் "ஆட்டுக் கொட்டிலில் வாயில் வழியாக நுழையாமல் வேறு வழியாக ஏறிக் குதிப்போர் திருடர் அல்லது கொள்ளைக்காரராய் இருப்பர். (யோவான் 10:1) வாயில் வழியாக நுழைபவரே தலைவனாக இருப்பான்" என்பது கூறப்படுகின்றது. சமுதாயத்தில் எத்தனைபேர் உண்மை வழிகாட்டிகள்?, அனேகர் பிழையான வழிகாட்டிகளே. சொந்த நலன், சுயநன்மைக்காகச் செயல்படுபவர்களே செல்வம் செல்வாக்கோடு வாழ்கின்றார்கள். மற்றவர்கள் இயலுமையற்றவர்கள்.

### தடைகளுக்கு முகம் கொடுத்தல்

"ஒவ்வொரு தடையும் என்பணியில் என்னை ஊக்கப்படுத்துகின்றது" என்று அறிஞர் லியனார்டோ டாவின்சி கூறுகின்றார். இயேசுவுக்காக வாழ்ந்த சீடர்கள் அவரது இறப்பின் பின்னர் பல தடைகளைச சந்தித்தார்கள். அந்தத் தடைகளைக் கண்டு அந்தச் சீடர்கள் ஒருங்கி இருப்பார்களேயானால் கிறிஸ்தவம் என்பது கேள்விக்குறியாகவே இருந்திருக்கும். சீடர்களின் வழிவழிவந்தவர்கள் திடமுடன் செயற்பட்டதினாலே திருச்சபை வளர்ந்தோங்கி வல்லமை நிறைந்ததாகச் செயற்படுகின்றது.

அருண் நிஷாந்

சமூகத்திற்கு நன்மை செய்யப் புறப்பட்டால் ஆயிரம் தடைகள் வந்தே தீரும். அவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து செய்யும் பணிகளே சமூகத்துக்கு உகந்தது. இறைவனுக்கும் உகந்த பணியாகும். பணிகள் பலவுண்டு தூய உள்ளத்துடன் தொடருங்கள். □

## மின்னல் தாக்கி ஒருவர் பலி

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மல்லாவிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல மின்னல் தாக்கி ஒருவர் பலியானார். மூவர் காயமடைந்துள்ளனர்.

பதமநாதன் பிரபாகரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

மல்லாவி முதலாம் யூனிட்டைச் சேர்ந்த அலெக்ஸ்சாண்டர் அருட்செல்வன் (வயது-25), பாலி நகரைச்சேர்ந்த இராசையா கண்ணன் (வயது-37), முதலாம் யூனிட்டைச் சேர்ந்த இளையதம்பி நாகேந்திரம் ஆகியோர் காயமடைந்தனர். (க)

## "தெரிதல்" வெளிவந்துள்ளது

(பொன்னாலை)

இளைய தலைமுறையினருக்கான "தெரிதல்" என்னும் கலை-இலக்கிய இதழின் பங்குனி, சித்திரை மாதங்களுக்கான நூல் வெளிவந்துள்ளது.

இவ்விதம் "சிரழிவு நிலை தொடரலாமா?" என்ற முகப்புச் செய்தியுடன், அ. யேசுராசாவின் "பட்டிமன்ற மனநிலைக்கு ஓர் எதிர்வினை" என்னும் விமர்சனமும் இலகிய பகிர்வுகள் போன்ற அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. (7-49)

## சூரிய மின்கலங்கள் அன்பளிப்பு

(கிளிநொச்சி)

லண்டன் ரெக் நிறுவனத்தின் நிதி உதவியுடன் தமிழீழ பொருண்மிய மதியுரைகத்தினால் கடந்த புதனன்று அன்புச் சோலை மூதாளர் பேணலகத்திற்கு மூன்று சூரிய மின்கலங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந் நிகழ்விற்கு மூதாளர் பேணலகத்தின் நிர்வாக இயக்குநர் தலைமை தாங்கினார். (க)

# மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

சுகாதார மற்றும் சுற்றாடல் வசதிகள் குறைந்த மீனவக்குடும்பங்களை இனங்கண்டு அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த விசேட வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரையோரப் பகுதிகளிலுள்ள மீனவ சமூகத்தினதும், நன்னீர் மீனவத் தொழிலில் ஈடுபட்டுள்ள சமூகத்தினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

கரையோரப் பிரதேசங்களில் வறுமை நிலையில் வாழும் குடும்பங்களை இனங்கண்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் வேலைத் திட்டத்திற்கென 8000 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், கரையோரப் பிரதேசங்களில் வாழும் மக்களின் குடிநீர்த் தேவையை நிவிர்த்தி செய்யும் பொருட்டு புதிய குடிநீர்த் திட்டங்களை ஆரம்பிக்க ரூபா 16 இலட்சம் வரை குறிப்பிட்ட பிரதேசங்களின் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சு மேலும் தெரிவிததுள்ளது. (ற-8)

# வீட்டுக்கும் வீதிக்குமுள்ள தூரத்தை அளக்கும் மக்கள்

(இணுவில்)

பிரதான நெடுஞ்சாலைகள் விஸ்தரிக்கப்படவுள்ளதையடுத்து, வீதியோர வீடுகளின் குடியிருப்பாளர்களும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் தமது இருப்பிடங்களுக்கும் வீதிக்கும் இடையிலான தூரத்தை அளத்து பார்ப்பதில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது.

இணுவில், கொக்குவில், கோண்டாவில், தாவடி போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இவ்வாறு தூரத்தை அளக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வீதிப் புனரமைப்பின் போது தமது இருப்பிடங்கள், வர்த்தக நிலையங்கள் பாதிக்கப்படுமா இல்லையா என்பதை அறிந்து கொள்வதில் குடியிருப்பாளர்கள் [illegible]வம் காட்டுகின்றனர்.

இவ் வீதிப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலுள்ள 6 பிரதான நெடுஞ்சாலைகள் இருமருங்கும் தலா 10 மீற்றர் அகலமாக விஸ்தரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-7,122)

# சொறிவில தாக்குதல் சம்பவத்திற்கு இராணுவமே பொறுப்பேற்க வேண்டும்

## -திருமலை அரசியல்துறை

(திருகோணமலை)

தமிழீழத் தேச விரோதிகளை ஒற்றர் படையாகப் பயன்படுத்திய ஸ்ரீலங்கா இராணுவமே சொறிவில துப்பாக்கிச் சூட்டுச் சம்பவ்த்துககுப் பொறுப்பேற்க வேண்டுமென தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

சொறிவில சம்பவம் குறித்து திருமலை மாவட்ட அரசியல்துறைப் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்ததாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அவர் இது விடயம் குறித்து மேலும் கூறுகையில்,

பொலனறுவை மாவட்டம் சொறிவில கிராமத்தில் கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து ஊடகங்கள மூலமும் பொதுமக்கள் மூலமும் அறிந்து கொண்டோம்.

தேச விரோதிகளான கருணா குழுவைச் சேர்ந்த பிள்ளையான் குழுவினருக்கும் ஈ.என்.டி.எல்.எப். விஜயன் குழுவினருக்குமிடையில் ஏற்பட்ட உட்பூசல் மற்றும் முரண்பாடு காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேச விரோதிகளை ஒற்றர் படையாகப் பயன்படுத்தும் ஸ்ரீலங்கா அரசும் இராணுவப் புலனாய்வுத் துறையினரும் தான் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்றார். (ற-4)

# புலமைப்பரிசில் கொடுப்பனவு ரூபா 5000 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

கல்வியமைச்சினால் வறிய மாணவர்களுக்கென வருடாந்தம் வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப்பனவு இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் 2400 ரூபாவிலிருந்து 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சின் செயலாளர் தாரா டிமெல் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இந்த புலமைப்பரிசில் கொடுப்பனவு வருடாந்தம் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் 10 ஆயிரம் வறிய மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை தொடர்ச்சியாக இந்தப் பணம வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-04)

# மீள் நியமன வயதெல்லை 65 ஆக நிர்ணயம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலவும் வைத்தியர்களுக்கான பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு அங்கு வைத்தியர்களை மீள் நியமனம் செய்யும் வயதெல்லை அறுபத்தைந்திற்கும் கூடுதலாக இருக்கக் கூடாதென்ற நியதியை வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு விதித்திருக்கின்றது.

இந்த வயதெல்லை நிர்ணயிக்கப்படாவிட்டால் பல வைத்தியசாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்படுமென்று பிரதிப் பணிப்பாளர்கள் தெரிவித்ததையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள நாற்பத்திரண்டு வைத்தியசாலைகளில் எண்பது சதவீதமான வைத்தியர்கள் மீள் நியமனம் பெற்றவர்கள் என்பதும் இவர்களில் பத்துப் பேர் அறுபத்தைநது வயதைக் கடந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (து)

# ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு முஸ்தீபு

வடக்கு- கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும் மருத்துவ ஆய்வு கூடங்களிலும் கடமைபுரியும் மருத்துவ ஆய்வுட தொழில்நுட்பவியலாளர்கள் (எம்.எல்.டி) அடுத்த வாரம முதல் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க மருத்துவ ஆய்வு கூட சேவையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் முறை மாறல் முறைக்கு எதிர்ப்புத் தெரிவிததே இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டியிருப்பதாக மருத்துவ ஆய்வு கூடத் தொழிற்சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

இவ்வகைத் தொழிற்சங்க நடவடிக்கையை நாம் இவ்வாரமே மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தோம். என்றாலும் இது சிங்கள, தமிழ் புத்தாண்டு காலமாகையால் இந்த நடவடிக்கையை அடுத்தவாரம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம்.


நாளை திங்கட்கிழமை எமது நிறைவேற்றுக் குழு கூடி தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் தினத்தை தீர்மானிக்கும் அதே நேரம் தேசிய வைத்தியசாலை, கொழும்பு வடக்கு ராகம வைத்தியசாலை, கொழும்பு களுபோவில வைத்திய சாலை, லேடி ரிட்ஜ்வே வைத்திய சாலை ஆகிய நான்கு வைத்தியசாலைகளிலும் மேலதிக வேலை நேரப் பகிஷ்கரிப்பு தொடர்ந்தும மேற்கொள்ளப்படும் என்கிறார். (க)

# மீள்பார்வை

## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

### (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 40



5) குடவோலை செயலாளர் நாயகத்தால் அல்லது அவர் பதிளாளராக்கும் பாராளுமன்றத்தின் பிறிதோர் உத்தியோகத்தரால் சேகரிக்கப்பட்டுச் செயலாளர் நாயகத்தால் பாராளுமன்றத்தின் சபாபீடத்தில் வைத்து எண்ணப்படல் வேண்டும். அந்த வாக்கெடுப்பின் முடிவை செயலாளர் நாயகம் பிரகடனம் செய்தல் வேண்டும்.

6) அ. இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் முன்மொழியப்படுமிடத்து முதவலாது குடவோலை வாக்கெடுப்பில் ஓர் வேட்பாளர் ஏனைய வேட்பாளர்கள் ஒருமித்துப் பெற்ற வாக்குகளிலும் பார்க்கக் கூடுதலான வாக்குகளைப் பெறத்தவறினால் மிகக் குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் சபாநாயகர் தெரிவிலிருந்து விலக்கப்பட்டு குடவோலை வாக்கெடுப்பு மேலும் தொடருதல் வேண்டும். ஒரு வேட்பாளர் (சந்தர்ப்பத்திற்கமைய) எஞ்சும் ஒரு வேட்பாளரிலும் கூடுதலான வாக்குகளை அல்லது எஞ்சிய வேட்பாளர்கள் ஒருமித்துப் பெற்ற வாக்குகளிலும் பார்க்க கூடுதலான வாக்குகளை பெறும்வரை ஒவ்வொரு குடவோலை வாக்கெடுப்பிலும் மிகக் குறைந்த வாக்குகள் பெறும் வேட்பாளர் விலக்கப்பட்டு வருவார்.

ஆ. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே குடவோலை வாக்கெடுப்பு நிகழுமிடத்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் சம அளவான வாக்குகளைப் பெற அவர்களுள் ஒருவர் இதன் (அ) பிரிவின்படி தெரிவிலிருந்தும் விலக்கப்பட வேண்டுமாயின் அத்தகைய சம அளவான வாக்குகளைப் பெற்றவர்களில் எவரைத் தெரிவிலிருந்தும் விலக்குவதென்பதைச் சீட்டிழுப்பின் மூலம் நிர்ணயித்தல் வேண்டும். சீட்டிழுப்பு எவ்வாறு நடைபெறவேண்டுமென்பது செயலாளர் நாயகத்தின் தீர்ப்பைச் சார்ந்தது.

இ. இரு வேட்பாளர்களுக்கிடையே நிகழும் குடவோலை வாக்கெடுப்பில் சம அளவு வாக்குகள் கிடைக்குமிடத்து மேலுமொரு குடவோலை வாக்கெடுப்பு நடத்துதல் வேண்டும். அக்குடவோலை வாக்கெடுப்பின் இறுதியிலும் வாக்குகளின் எண்ணிக்கை சம அளவினதாயிருந்தால் அவ் வேட்பாளர்களுள் எவரைத் தெரிவிலிருந்து விலக்க வேண்டுமென்பது சீட்டிழுப்பின் மூலம் நிர்ணயிக்கப்படல் வேண்டும். அச்சீட்டிழுப்பு எவ்வாறு நடைபெற வேண்டுமென்பது செயலாளர் நாயகத்தின் தீர்ப்பைச் சார்ந்தது.

7). குடவோலைகள் எண்ணப்பட்டதும் அவற்றை ஒரு பேழையிலிட வேண்டும். உறுப்பினர் ஒருவர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார் எனப் பிரகடனமானதும் பாராளுமன்றத்தின் முன்னிலையில் அப்பேழையைள மூடி முத்திரையிட்டு ஒரு பஞ்சாங்க மாதத்திற்குச் செயலாளர் நாயகத்தின் பாதுகாப்பில் வைத்தல் வேண்டும். பின்னர் பாராளுமன்றத்திலிருந்து தமக்குக் கிடைக்கும் பணிப்பெதற்கும் அமையச் செயலாளர் நாயகம் இக்குடவோலைகளை எரித்துவிட்டு அவ்வாறு செய்யப்பட்டதாகப் பாராளுமன்றத்திற்கு அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

***சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம்***

5. 1) தாம் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் சபாநாயகர் அங்கு சமுகமளித்திருக்கும் உறுப்பினர் அனைவரும் சத்தியப்பிரமாணத்தை அல்லது உறுதிப்பிரமாணத்தைச் செய்து கொள்வதற்கும் கையொப்பமிடுவதற்கும் வகைசெய்தல் வேண்டும். செயலாளர் நாயகத்தால் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்து வைக்கப்படுதல் வேண்டும்.

2) சத்தியப்பிரமாணத்தை அல்லது உறுதிப்பிரமாணத்தைச் செய்து கொண்டவுடன் சபாநாயகர் முதலாக ஒவ்வோர் உறுப்பினரும் செயலாளர் நாயகம் அதற்கென வைத்திருக்க வேண்டிய புத்தகத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

3) ஏற்கனவே சத்தியப்பிரமாணத்தை அல்லது உறுதிப்பிரமாணத்தைச் செய்து கொள்ளாத ஓர் உறுப்பினர் பாராளுமன்றம் கூடுகின்ற எத்தினத்திலும் 19ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் நியமிக்கப்படும் நேரத்தில் சபாபீடத்தில் சமுகமளிக்கலாம். அவருக்கு சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் செய்து வைக்கப்படும். இதன் பின்னர் அவர் புத்தகத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

***பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் தெரிவு***

6. 1) 1ஆம் நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் முதலாவ்து அமர்வின் போது அல்லது பிரதிச் சபாநாயகர் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளர் பதவியில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டதன் பின்னர் நிகழும் முதலாவது கூட்டத்தின் பொது அலுவல் ஆரம்பத்தின் போது சந்தர்ப்பத்திற்கமைய பிரதிச் சபாநாயகரொருவர் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளரொருவரைத் தெரிவு செய்வதற்குப் பாராளுமன்றம் முற்படும்.

2)பிரதிச் சாபநாயகரதும் குழுக்களின் பிரதித் தவிசாளரதும் தெரிவுமுறை தெரிவைச் சபாநாயகர் நடாத்துவதைத் தவிர்ந்த மற்றெல்லா விதத்திலும் கூடுமானவரை சபாநாயகர் தெரிவு முறையை ஒத்திருத்தல் வேண்டும்.

***கூட்டங்கள்***

7. 1) பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தலான்றி. மாதந்தோறும் ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது ஞாயிற்றுக்கிழமையை அடுத்துவரும் வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக இருவாரங்களிலும் பாராளுமன்றம் அமர்தல் வேண்டும். அத்தகைய முதலாவது. மூன்றாவது வாரங்களில் செவ்வாய். புதன். வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் பாராளும்மன்றம் அமர்தல் வேண்டும்.

2)பாராளுமன்றம் அமர்வு மு.ப.9.00 மணிக்கு ஆரம்பிக்க வேண்டுமெனினும் ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட கூட்டமொன்று ஜனாதிபதியால் கூட்ட முன்னறிவித்தல் கொடுக்கும் போது நிர்ணயிக்கப்படக் கூடிய அத்தகைய நேரத்தில் ஆரம்பித்தல் வேண்டும்.

3) பரிசீலனையிலிருக்கும் எவ்வலுவலின் மீதிலா நடவடிக்கைகள் பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி நண்பகல் 12.00 மணிக்கு வினாவின்றி இடைநிறுத்தப்பட்டு பி.ப. 1.30 மணிக்கு மீளத் தொடங்குதல் வேண்டும்.

4) சபாநாயகர் பி.ப. 4.30 மணிக்கு வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பார்.

5) பி.ப. 3.30 மணிக்கு பரிசீலனையிலிருக்கும் எவ்வலுவலின் மீதிலுமான நடவடிக்கைகள் இடை நிறுத்தப்படல் வேண்டும். அவ்வேலையில் பாராளுமன்றம் குழுநிலையிலிருந்தால் தவிசாளர் அக்கிராசனத்தை விட்டகன்று பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடல் வேண்டும். பாராளுமன்றத்தையோ விவாதத்தையோ ஒத்திவைக்கவெனவும் அல்லது குழுநிலையில் "தவிசாளர் முன்னேற்றத்தை அறிவிக்குக" அல்லது அவர் அக்கிராசனத்தை விட்டகலுக எனவும் பிரேரணையொன்று பிரேரிக்கப்பட்டால் அத்தகைய தடங்கற் பிரேரணை ஒவ்வொன்றும் வினாவின்றியே வலுவிழக்கும்.

எனினும் அலுவலை இடைநிறுத்துகையில் எப்பொழுதும் 41 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் விவாதம் முடிவுறுதல் பிரேரிக்கப்படலாம். அவ்வாறு பிரேரிக்கப்பட்டால் அல்லது அந்நிலையியற் கட்டளையின் கீழ் நடவடிக்கைகள் நிகழ்ந்து கொண்டிருந்தால் அந் நடவடிக்கைகள் விளைவான விடயமும் அதே நிலையியற் கட்டளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேறெந்தப் பிரேரணையினதும் விடயமும் தீர்வு காணப்படும்வரை சபாநாயகரோ தலைவரோ ஆசனத்தை விட்டகலலாகாது.

6) பரிசீலனையில் இருக்கும் அலுவல் பி.ப 3.30 மணிக்கு முடிவாக்கப்பட்ட பின்னர் உறுப்பினரொருவர் எதிர்ப்புத் தெரிவிக்கும் அலுவல் எதுவும் பரிசீலனைக்குட்படுத்தலாகாது.

(பொது அலுவல்களின் தொடக்கத்தில் அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் திருத்தமோ விவாதமோ இன்றித் தீர்மானிக்கப்படுவதற்காக பின்வரும் கருத்துப்பட ஒரு பிரேரணையைக் கொணரலாம்.

"இன்றைய அமர்வில் குறித்த ஒரு அலுவல் மீதான நடவடிக்கைகள் 7ஆம் நிலயியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்தும் விலக்குப் பெறுவதாக"

மேலும் அத்தகைய பிரேரணை ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து குறித்த அவ்வலுவல் இடைநிறுத்தத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் விவாதத்திற்குட்பட்டிருக்கும் பட்சத்தில் அதனை இடைநிறுத்தலாகாது. அத்துடன். எதிர்ப்பிருப்பினும் எந்நேரத்தும் அலவ்வலுவல் எடுக்கப்படலாம்.

எனினும் இந்நிலையியற் கட்டளையின் செயற்பாட்டிலிருந்து விலக்குப் பெற்ற அலுவல் பிப 4.30. மணிக்குப் பின்னர் முடிவுறும் போது விலக்குப்பெற்ற அலுவலின் இறுதி விடயம் முடிவுற்றதும் சபாநாயகர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை உடனடியாக ஒத்திவைத்தல் வேண்டும்). (தொடரும்)

# பிரதேச செய்தியாளர் (பயிலுநர்) வெற்றிடம் -2005

பின்வரும் பிரதேசங்களுக்கான செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) தெரிவு செய்யப்படவுள்ளனர்.

**வலிகாமம்**

| | |
|---|---|
| ஓட்டுமடம் | பண்டத்தரிப்பு |
| கொக்குவில் | குருநகர் |
| தாவடி | பாசையூர் |
| இணுவில் | அரியாலை |
| மருதனார்மடம் | நாவாந்துறை |
| சுன்னாகம் | கொட்டடி |
| மல்லாகம் | சுண்டுக்குளி |
| தெல்லிப்பழை | ஈச்சமோட்டை |
| ஏழாலை | கொய்யாத்தோட்டம் |
| கந்தர்மடம் | **தென்மராட்சி** |
| நல்லூர் | நெடுங்குளம் (அரியாலை) |
| நாயன்மார்கட்டு | நாவற்குழி |
| இருபாலை | கைதடி |
| கோப்பாய் | நுணாவில் |
| நீர்வேலி | மட்டுவில் |
| சிறுப்பிட்டி | மீசாலை |
| புத்தூர் | கொடிகாமம் |
| வாதரவத்தை | மிருசுவில் |
| ஆவரங்கால் | எழுதுமட்டுவாள் |
| அச்சுவேலி | பளை |
| நவக்கிரி | கச்சாய் |
| திருநெல்வேலி | முகமாலை |
| உரும்பிராய் | **தீவகம்** |
| ஊரெழு | மண்டைதீவு |
| அச்செழு | அல்லைப்பிட்டி |
| புன்னாலைக்கட்டுவன் | மண்கும்பான் |
| ஆனைக்கோட்டை | வேலணை |
| நவாலி | சாட்டி |
| மானிப்பாய் | சரவணை |
| சண்டிலிப்பாய் | கரம்பொன் |
| சங்கானை | நாரந்தனை |
| சித்தங்கேணி | சுருவில் |
| மூளாய் | புளியங்கூடல் |
| அராலி | நயினாதீவு |
| மாதகல் | நெடுந்தீவு |
| இளவாலை | அனலைதீவு |
| சில்லாலை | எழுவைதீவு |

**தகுதிநிலை**

* 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்.
* க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களும், பத்திரிகைத்துறையில் ஆர்வமுடையவர்களும்.
* முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி,பிறந்த திகதி, கல்வித்தகைமை, தே.அ.அ.இலக்கம், கிராமசேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு என்பவற்றை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ் இரண்டு, கல்விச் சான்றிதழ், தே.அ.அட்டை மற்றும் ஆவணங்களின் போட்டோப்பிரதிகள், புதிய கோவை (பைல்) என்பவற்றுடன்,

**வலிகாமம்**
19-04-2005 காலை 9.30மணிக்கும்

**தென்மராட்சி-தீவகம்**
20-04-2005 காலை 9.30 மணிக்கும் நேரில் வரவும்.

**15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**நிர்வாக உத்தியோகத்தர்**
**வலம்புரி - சங்குநாதம்**

# சட்ட அறிக்கைகளை ஆவணப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தில் தற்போது இருக்கும் சகல சட்ட அறிக்கைகளையும் ஆவணப்படுத்தும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் பணிப்புரைக்கு அமைய இந்த சட்ட அறிக்கைகள் ஆவணப்படுத்தப்படுமென்று உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் ஹேமா ரத்தின நாயக்க தெரிவித்தார்.

அவர் இதுவிடயம் குறித்து மேலும தெரிவிக்கையில், தொழில் நுட்ப ஆலோசகர் ஒருவரின் உதவியுடன் சட்ட அறிக்கைகளை ஆவணப்படுத்தும் திட்டத்தின கீழ் வழக்குகளின் தீர்ப்புக்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்படுகின்ற வழக்குகளின் தீர்ப்புக்களையும் கணனிமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ற-8)

## புதுவையின் கவிதை தொகுப்பு வெளியீடு

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் கவிதைத் தொகுப்பு அவுஸ்திரேலியாவின் சிட்னியில் இன்று வெளியிடப்படவுள்ளது.

ஹோம்புஸ் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் இன்று மாலை இவ்விழா தொடங்குகிறது.

சிட்னி வாழ் இலக்கிய ஆர்வலர்கள் இந்த வெளியீட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்துள்ளனர். (ஐ)

## இன்று ஒரு தகவல்

# பாவ மன்னிப்பு

வழியில் ஒருவர் அடிபட்டுக் கிடந்தால் "அவன் பாட்டிற்கு கிடக்கட்டுமே! நமக்கேன் வம்பு" என்று நினைத்துக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் செல்பவர்கள் இந்த உலகத்தில் அதிகம். மனிதனுக்கு மனிதன் உதவ வேண்டும். இறைவன் விரும்புவது இதைத்தான் என்று இயேசுநாதர் கூறுகிறார். மன முவந்து இறைவனை நாம் நேசிக்க வேண்டும். அயலாரை நம்மை மாதிரியே நினைத்து நேசிக்க வேண்டும்.

சரி! என்னுடைய அயலான் யார்? இதை விளக்குவதற்கு இயேசுநாதர் ஒரு கதையை சொல்லியிருக்கிறார். ஒருவன் ஜெருசலத்திலிருந்து ஜெரிக்கோவுக்குப் போய்க்கொண்டிருந் தான். வழியில் சில திருடர்கள் இவனை அடித்துப் போட்டு விட்டு இருப்பவற்றை எல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டார் கள். பலமானஅடி. கீழே விழுந்து கிடக்கிறான்.யாராவது உதவி செய்யாவிட்டால் அவன் பிழைப்பது கஷ்டம். அந்த சமயத்தில் ஒரு யூதகுரு அந்த வழியாக வந்தார். இவன் கிடப்பதைப் பார்த்தார் ஒன்றும் செய்யவில்லை. அவர் பாட்டுக்குப் போய் விட்டார்.

அடுத்ததாக லேவியன் ஒருவன் அந்த வழியே வந்தான். அவனும் ஒன்றும் செய்யவில்லை. அவன் பாட்டுக்குப் போய் விட்டான். இவர்களிருவரும் ஜெருசலத்திலிருந்து கோயில் களில் செய்ய வேண்டிய பணிகளை முடித்துக்கொண்டு ஜெரிக் கோவுக்குப் போய்க் கொண்டிருப்பவர்கள். மூன்றாவதாக சமாரித்தான் ஒருவன் அந்த வழியாக வந்தான். அடிபட்டுக் கிடந்தவனைப் பார்த்தான். உடனே அருகே ஓடிப்போய் காயங் களை துடைத்து மருந்து போட்டுக் கட்டிவிட்டான். தன்னுடைய கோவேறுகழுதை மீது அவனைத் தூக்கி வைத்து ஒரு சத்தி சத்திற்கு அழைத்துப் போனான். அங்கே இருந்தவரிடம் இவரை கவனித்துக்கொள்ளுங்கள் என்று கூறிப் பணம் கொடுத்தான். இன்னும் செலவானாலும் திரும்பி வரும்போது செலவான பணத்தைக் கொடுத்து விடுகிறேன் என்று கூறிவிட்டு வியாபார வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டான்.

காயம் பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் யார் அயலான்? யார் பரிவு காட்டி உதவி புரிந்தானோ அவன்தான்! இப்படிப் பட்ட அயலார்களை நம்மைப் போலவே நேசிக்க வேண்டும். மனிதன் நல்லவனாக இருப்பதும், கெட்டவனாக இருப்பதும் அவன் மனதைப் பொறுத்ததுதான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் நல்லவனாக இருப்பவன் இன்னொரு காலத்தில் மாறிப் போய்விடுகிறான்.

லியானாடோ டாவின்சி பற்றி எல்லோருக்கும் தெரியும். மோ னாலிசா அவரது படைப்பு. தலாஸ்ட் சுப்பர் அவருடைய படைப்பு. அருமையான ஓவியம். மிலானில் இதை தீட்டியிருக்கிறார். அதை வரையும் போது டாவின்சி என்ன செய்தாரென்றால் முதலில் இயேசுவின் சீடர்கள் 11 பேரையும் வரைந்து முடித்துவிட்டார். இரண்டே இரண்டு பேரைத்தான் இன்னும் வரையவில்லை. ஒருவர் இயேசுகிறிஸ்து. இன்னொருவர் அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் இஸ்காரியத். இந்த இருவரது உருவத்தை யும் வரைவதற்கு உள்ள இடத்தை அப்படியே விட்டுவிடார். ஏன் அப்படிச் செய்தார் தெரியுமா? லியானாடோ டாவின்சி எல்லாம் துல்லியமாக அமைய வேண்டுமென எதிர்பார்ப்பவர்.

பொருத்தமான மொடல்கள் அவருக்குத் தேவைப்பட்டனர். அதுவரை வரைவதில்லை என்று வைத்துவிட்டார். முதலில் கிறஸ்துவை வரைய வேண்டும். அதற்குப் பொருத்தமாக ஒரு மொடல் தேவை. மிலான் நகரத் தெருக்களில் தேடியலைந் தார். ஒரு அழகிய இளைஞனைச் சந்தித்தார். தெய்வீக அம்சம் அப்படியே இருந்தது. இயேசு கிறிஸ்துவுக்கு இந்த இளைஞன் தான் பொருத்தமான மொடல் என்று முடிவு செய்துவிட்டார். உடனே இடதுபக்கம் விட்டு வைத்திருந்த இடத்தில் இயேசு வை வரைந்து முடித்துவிட்டார். அந்த வேலை முடிந்தது.

அடுத்தது யூதாஸ்... இதற்கு ஒரு மொடல் தேவை. மறுபடியும் தேடித் தேடி அலைந்தார். பொருத்தமாக ஒருவரும் கிடைக்க வில்லை. அப்படியே பல வருடமாகிவிட்டது. நீண்டகாலத் திற்குப் பின் ஒருவர் கிடைத்தார். அவர் ஒரு குடிகாரர். மிகவும் பொருத்தமாகத் தெரிந்தார். அந்த மொடலுக்கு அழைத்துச் சென்று உட்காரவைத்து வரையத் தொடங்கினார். அந்த ஆள் படத்தைப் பார்த்ததும் திடீரென்று கத்த ஆரம்பித்துவிட்டான். "நீண்ட நாட்களுக்கு முன்னால் இயேசு கிறிஸ்துவுக்கு மொட லாக வைத்து வரைந்தீர்களே அதே ஆள்தான் நான். இப்போது இப்படி ஆகிவிட்டேன் என்றானாம். இப்படி ஒரு கதை உண்டு.

அந்த இளைஞனிடம் இருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் தெய்வமாக உயர வேண்டிய மனிதன் தீய பழக்கவழக்கம் காரணமாக மிருகமாகத் தாழ்ந்து விடுகிறான். அவர்களுக்கெல்லாம் பாவ மன்னிப்பு கிடைக்க வேண்டும். மறுபடியும் தெய்வமாக உயர வேண்டும்.

இபபோதெல்லாம் சிலபேர் மன்னிக்கமுடியாத அளவுக்கு பாவம் செய்கின்றனர். அப்படிப் பாவம் செய்த ஒருவர் ஒரு பெரிய வரிடம் போய் மன்னிப்புக் கேட்டார். அதற்கு அவர் சொன்னார் "உனது பாவத்தை என்னிடம் கூறி நீ மன்னிப்பு கேட்கிறாய்! எனது பாவத்தை நான் யாரிடம் போய் கூறி மன்னிப்புக் கேட்பது" என்றார். "நீங்கள் என்ன பாவத்தை செய்கிறீர்கள்?" என்றான். "நீ செய்த பாவத்தை நான் மன்னிக்கிறேனே அந்த பாவத்தைச் சொன்னேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சத்திரசிகிச்சை மூலம் ஈழக் குழந்தையை பிரசவிக்கச் செய்ய வெளிநாடுகள் முயற்சி

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

**கையைச் சுட்டுக்கொண்டாவது தமிழீழம் என்ற குழந்தையை பிரச விக்கச் செய்யவே வெளிநாட்டு சக்திகள் முயல்கின்றன என்று ஜே. வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

**தமிழீழக் குழந்தையை இயற்கையாக பிரசவிக்க முடியாது என்பதை அறிந்து கொண்ட சர்வதேச வைத்தியர்கள் சத்திரசிகிச்சை உபகரணங்களுடன் வருகின் றனர். உலக வங்கிப் பிரதிநிதிகளும் சொல்ஹெய்மும் இத்தகைய பிரயத்தனங் களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.**

கடுவெல தொகுதியில் நடைபெற்ற ஜே.வி.பியின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் பேசுகையில், இன்று நாம் பலதத சவாலை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின் றோம. அரச இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு, தாயக உரிமை, இலங்கை அரசின் வரலாற்று உரிமைகள் என்பவற்றைப் பாதுகாத்தல் என்பன நாம் எதிர்நோக் கும் சவாலாகும்.

எமது நாட்டைச் சுரண்டிப் பிழைக்க வரும் சக்தி களை அறிந்து இனம்கண்டு அவற்றைத் தோற கடிக்க முயற்சிக்க வேண்டும். இலங்கை மின்சார சபையை விற்கும் யோசனையை அரசாங்கத்தில் இருக்கும் பலரும் தெரிவிக்கின்றனர்.

இலங்கை முன்னேற்றமற்ற, இலங்கை திறமை யற்ற நாடு என்று பிரசாரப்படுத்தும் சதித்திட்டம அமு லாக்கபபடுகின்றது. ஆனால் இன்று சமாதான முயற்சி அனைவராலும் ஓதப்படும் மந்திரமாகிவிட்டது. முப் பத்து முக்கோடி முறை இந்த மந்திரம் முணுமுணுக் கப்படுகின்றது. இதனால் டொலர்கள் கட்டு கட்டாக சில ருககுக் கிடைகின்றன. இதில் சில அரசியல் வாதி களும் விதிவிலக்கு அல்ல.

குறிப்பாக ஐக்கிய தேசியக்கட்சியில் உள்ளவர்கள் சமாதானம் என்ற சொல்லை வைத்தே வாழ்க்கையை நடத்து கின்றார்கள்.

சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்வது போல பாசாங்கு செய்து வெளிநாடுகளிடம் இருந்து கட்டுக் கட் டாகப் பணம் வசூலித்த ஐக்கிய சேதியக் கட்சியினா இன் றும் "சமாதானம்" சமாதானம் என்று புலம்பித் தாிகின்றனர்.

அவர்கள் இன்று தமிழ் மக்களின் உதவியை நாடி அவர்களை ஏமாற்றி மீண்டும் ஆட்சிக்கு வரத் துடிக்கின்றனர்.

பெரும்பான்மையின மக்களின் ஆதரவு அவர்களுக்கு கிடைக்காதமையினாலேயே தமிழ் மக்களின் ஆதரவைப் பெற முயற்சிக்கின்றார்கள். எம்மைப் பொறுத்தவரையில் நாம் எந்த மக்களையும் ஏமாற்றி வாழ நினைக்கவில்லை.

அத்துடன், எமது கொள்கைகளில் இருந்து நாம் வில கவுமில்லை. எமது மக்களை வெளிநாட்டவரின் சதி வலைக்குள் இருந்து காப்பாற்றுவதற்காக நாம் தொடர்ந்தும் போராடுவோம்.

விடுதலைப்புலிகளின் நாட்டைத் துண்டாடுவதற்கு எடுக்கும் முயற்சிகளையும் நாம் முறியடிப்போம் என்றார்.

(க)

# யாழில் இம்முறை மேதினத்தை எழுச்சியுடன் நடாத்த புதிய ஜனநாயகக் கட்சி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தாலும் பின்பு சுனாமியாலும் பேரழிவு களுக்கும் பாதிப்புக்களுக்கும் உள்ளான மக்களின் அவலங்களையும், தொழிலாளர்கள்,விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் இன்றைய சூழலில் எதிா நோககியுள்ள அன்றாடப் பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்து அவற்றுக்கான தீர்வுகள், பரிகாரங்களை வற்புறுத்தும் வகையில் இம்முறை மேதினத்தை ஆர்ப் பாட்ட ஊர்வலத்துடன் கூடிய பொதுக் கூட்டமாக யாழ்ப் பாணததில் நடாத்தத் தீர்மானித்துள்ளதாக புதிய ஜனநாயகக் கட்சியின் வட பிரதேசக்குழு அறிவித் துள்ளது.

எதிர்வரும் மேதினத்தை யாழ்ப்பாணம், மலை யகம் மற்றும் கொழும்பு ஆகிய மூன்று பிரதேசங் களில் நடாத்துவதென புதிய ஜனநாயகக் கட்சி யின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

அதற்கு அமைவாக வழமைபோன்று இம்முறை யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துடன் மேதி னத்தை நடாத்துவதற்குக் கட்சியின் வடபிரதேசக் குழு தீர்மானித்துள்ளதென அதன் செயலாளர் கா.கதிர் காமநாதன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேற்படி மேதினத்தில் தொழிலாளர்கள்,விவசாயிகள், உழைக்கும் மக்கள் எனப் பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்கும் அனைத்து மக்களையும் கலந்துகொள்ளச் செய் வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சி கடந்த காலங்களில் இரா ணுவ- பொலிஸ் அடக்குமுறைகளை எதிர்த்து இன வர்க்க- சாதிய பெண்- ஒடுக்குமுறைப் பிரச்சினைகளில் மக்களின் உரிமைகளை வற்புறுத்தி அவற்றை வென்றெடுக்கும் கோரிக கைகளை முன் நிறுத்தி ஆர்ப்பாட்டங்களையும் பொதுக் கூட்டங்களையும் வருடாவருடம் நடாத்தி வந்துள்ளது.

அவ்வாறே இவ்வருட மேதினத்தை யாழ்ப்பாணத்தில் மேலும் சிறப்பாகவும்,புரட்சிகரமாகவும் நடாத்துவதற்கு கட் சியும் அதன் வெகுஜன அமைப்புகளும் தயாரிப்புகளைச் செயது வருவதாக மேற்படி செய்திக் குறிப்பில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

(ற)

## நியாப்-II திட்டத்தின் கீழ்

# புனரமைக்கப்படவுள்ள கிராமங்களில் விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

நியாப் -II திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள 25 கிராமங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான ஆரம்பகட்ட விழிப்புணர்வூட்டும் கூட்டங்கள் அடுத்த வாரத்திலிருந்து நடாத்தப்பட வுள்ளன.

எதிர்வரும் 20ஆம் திகதி கரணவாய் வடக்கு, 21ஆம் திகதி நயினாதீவு தெற்கு, 25ஆம் திகதி காலை வண்ணபுரம் ,மாலை சமரபாகு கிராமம்,27ஆம் திகதி காலை நாரந்தனை வடக்கு,மாலை கல்லாரை, 28ஆம் திகதி காலை பிட்டி எல்லை, மாலை வட்டுக் கோட்டை தெற்கு மற்றும்29ஆம் திகதி காலை குப் பிளான் தெற்கு, மாலை சங்குவேலி என்ற ஒழுங் கில் இக் கூட்டங்கள் நடாத்தப்படவுள்ளன.

அத்துடன், அடுத்த மாதம் 2ஆம் திகதி செல்வபுரத்தி லும், 3ஆம் திகதி காலை கோண்டாவில் வடகிழக்கிலும், மாலை புத்தூர் கிழக்கிலும், 4ஆம் திகதி செம்பியன்பற்று தெற்கிலும் , 5ஆம் திகதி காலை நவாலி கிழக்கிலும், மாலை வாதரவத்தையிலும்,6ஆம் திகதி காலை கைதடி கிழக்கி லும், மாலை வெள்ளாம் பொக்கட்டியிலும் , 7ஆம் திகதி சில்லாலையிலும்,9 ஆம் திகதி காலை கெருடாவில் தெற் கிலும, மாலை மண்டுவிலிலும், 10ஆம் திகதி காலை குடமி யனிலும், மாலை கரம்பைக் குறிச்சியிலும், 11ஆம் திகதி கொட் டைககாட்டிலும் இவ் விழிப்புணர்வூட்டக் கூட்டங்கள் நடாத்தப் படவுள்ளன. இக்கூட்டங்களில் கிராம அபிவிருத்தித் திட்டங் களை மக்களுடன் சேர்ந்து தயாரிப்பதற்கான நடவடிக்கைக ளும் எடுககப்படவுள்ளன.

(ரு-19)

# இரத்த தானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாதுகாப்புப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ரி.தெனனக்கோன் தெலலிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையை கடந்த திங்கட்கிழமை பார் வையிடச் சென்றிருநதவேளை, அங்கிருந்த வைத் தியர்களினால் அங்கு இரத்த வங்கியில் இரத்தத் திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இராணு வத்தினர் மூலம் இரத்தம் பெற்றுத் தருமாறும் கேட்டுக்கொண்டதற்கு அமைய பாதுகாபபுப் படைத் தளபதியினால் பாதுகாப்புப் படை வீரர்கள் இரத் ததானம் செயவதற்காக கடந்த 12ஆம் திகதி ஒழுங்கு செய்யபபட்டிருந்தது.

இதற்கமைய 53பேர் இரத்ததானம் செயதனர். இவர் களுக்கு வைத்திய நிர்வாகத்தினர் நன்றி தெரிவித் தனர்.

(ற)

# செஞ்சிலுவைச் சங்கம் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்டு சுகாதாரப் பொருட்கள் கிடைக் காதவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங் கத்தினால் இன்று அவை வழங்கப்படவுள்ளன.

சுனாமியால் பாதிக்கபபட்டு உறவினர்களின் வீடுகளில் தங்கியிருநது, சுகாதாரப் பொருட்கள் கிடைக்காதவர் களும், முகாம்களில் தங்கியிருந்த வேளை சுகாதாரப் பொருட்கள் கிடைக்காதவர்களும் சுனாமி அட்டைகளுடன் பருத்தித்துறை செஞ்சிலுவைச் சங்கக் கிளைக்கு இன்று காலை 9மணிக்கு சமுகம் தருமாறு யாழ்ப்பாண செஞ்சிலு வைச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி வி.தியாகராசா அறிவித்துள்ளார்.

(ச)

# ...க்கம் 15'

...ரும், நாயுடு பேரவைத் தலைவருமான ...திரைப்படத்துறையில் இறங்கியுள்ளார். ...ற அவரது புதிய த்ரைப்பட நிறுவனம் ...ன்ற திரைப்படத்தைத் தயாரிக்கிறார். ...கன், கதாநாயகியுடன் முன்னணி திரைப் ...நடிக்கும் இப்படத்தின் கதை, திரைக் ... இயக்குகிறார் எழுத்தாளர் ஜே. டி. ஆர்.




## ...ாக்குலக்'

...விநாட்டுத் தயா...ப்பாளர்கள் பிரசாந்திற்கு ...ற்போது. ஜெய் ...காசுக்கு இந்த அதிஷ்டம் ...ழுது இவர் நடி...த்துவரும் நான்கு படங்க ...யாரிப்பாளர்கள்தான்.

---

## ...ர் தோளில் கரண்

...ரொடக்ஷன்ஸ் தயாரிக்க, பிரகாஷ் இயக் ...ாவாக ...ரண் நடித்த 'இஸ்ரா' என்ற மலை ...வில மிகப்பெரிய ஹிட்டான காரணத்தால், ... கரணுக்கு அமோக வரவேற்பு கிடைத்

... ஜோடியாக மும்பை மாடல் துர்கா ஷெட்டி, ...ள். அதிரடி அக்ஷன் படமான இதில் தில ...ரியா...கான் உட்... எட்டு வில்லன்களுடன் ...க்ரோஷமான சண்டைக்காட்சி படத்தின் ...குகளில் கரண் தோனறும் எந்தக் காட்சி ...பல்த்த கைத்தட்டல் ஒலி கேட்க, அங ...ள் சிலருக்கு கிலி ஏற்பட்டுள்ளதாம். படம் ...கொச்சின் சரிதா தியேட்டரில் படம் பார்த்த ...ர்கள் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு ...தை ...லம் வந்தார்களாம்.

---

...னையேதான் பார்க்கிறா, அவளை எப்படியா ...ண்பர்களின் உற்சாகத்தூண்டுதலின் பேரில் ...ளக்கத் தொடங்கும் காதலானது கடைசியல் ...ல்களைச் சந்திக்க நேரிடும் என காதலைப் ... சொல்ல வரும் படம் '18 வயதில் நான்' ... இந்தப் படத்தை இயக்குவது டி.ஏ.ஆனந்த்.

# அடித்து விட்டதே!

கதாநாயகனாக நடிக்க விவேக்கிற்கு அதிஷ்டம இல்லை.

இவர் இதற்கு முன் கதாநாயகனாக நடித்த படம் பாதியிலேயே நின்று தயாரிப்பாளா இறந்துவிட்டார். தற்போது நடித்துவந்த 'சொல்லி அடிப்பேன்' படமும் அவரது தலையில் அடித்துவிட்டது.


---

# சண்டைக்கு பவுண்!

'சச்சின' படத்தின் சண்டைக் காட்சிகளை மிகவும் சிறப்பாக அமைத்துக்கொடுத்தார் பெப்சி விஜயன். விஜய் மோதும் காட்சிகளைப் பார்த்த தயாப்பாளர் தாணு உடனே பத்து பவுண் தங்கச் சங்கிலயை வாங்கி பெப்சி விஜயன் கழுத்தில் மாட்டிவிட்டாராம்.

---

வடிவேலு முக்கிய பாத்திரத்தில் நடிக்கும் ஒரு படத்திற்கு பெயர் 'பணம் பத்துகோடி'




# இனிமேல் ரஜினி வருடத்திற்கு ஒரு படம் நடிப்பார்!

## சந்திரமுகி இயக்குனர் பி.வாசு பேட்டி!



தன் அடுத்த சுற்றை ஆரம்பித்துவிட்டார் பி.வாசு. இவர் இயக்கிய கன்னடப் படமான 'ஆப்தமித்ரா' பெங்களூர் சந்தோஷ் தியேட்டரில் 225நாட்களைக் கடந்து ஹவுஸ்புல்லாக ஓடிககொண்டிருக்கிறது. 7சென்டர்களில் ஒரு வருடத்திற்கு ஓடக்கூடிய படம் என்று கணித்திருக்கிறார்கள். இப்படி கன்னடத்தில் தோரணம் கட்டி வ்ரவேற்கிறார்கள் என்றால், தமிழ்நாட்டில் இன்னும் கும்மாளம்.

புதிய இயக்குனர்களிடம் கூட கதையைக் கேட்டு உதட்டைப் பிதுக்கிய ரஜினியை எடுத்த எடுப்பிலேயே சம்மதிக்க வைத்து தியேட்டர் வரைக்கும் இழுத்துவந்த சாமர்த்தியத்திற்காகவே அவருக்கு கோவில் கட்டாத குறையாகக் கும்பிடுகிறார்கள் ரஜினி ரசிகர்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், பி.வாசுவுக்கு 'சந்திரமுகி' 50ஆவது படம்! பத்து வருடம் கழித்துப் பார்த்தாலும் அதே உற்சாகத்தோடும் நிதானத்தோடும் பேச ஆரம்பக்கிறார் பி.வாசு.

ரஜினி 'சந்திரமுகி' படம் பார்த்துவிட்டு என்ன சொன்னார்?

படத்தைப் பாாத்திட்டு நான் நினைச்சதைவிட நன்றாக வந்திருக்கு என்று பாராட்டினார். அதேமாதிரி படத்தின் தயாரப்பாளர், விநியோகஸ்தர்கள் எல்லோரும் படத்தைப் பார்த்திட்டுப் பாராட்டினாங்க, மறைந்த சிவாஜி சாருக்குத்தான் இநத நேரத்தில் நன்றி சொல்லணும். அவருடைய ஆத்மாதான் எஙகளை இணைச்சு இப்படி ஒரு படத்தை கொடுத்திருக்கு. இதை ரஜினி சாரிடமே நான் சொன்னேன்.

'சந்திரமுகி' படத்தில் ரஜினி அரசியல் டயலாக் எதுவும் பேசவில்லையாமே?

ஆமாம். இந்தக் கதைக்கு அரசியல் தேவையில்லை. அதனால் அவர் பேசவில்லை. இதில் தாய் பாசம், தங்கை பாசம், வில்லன் என்று எதுவுமே கிடையாது. கதையே கொஞ்சம் வித்தியாசமானது.

ரஜினியின் 'உழைப்பாளி' படத்தை நீங்கள் இயக்கிய போது அப்படத்திற்கு தடை போடப்பட்டிருந்தது. அதுபோல டென்ஷன சந்திரமுகியில் உங்களுக்கு ஏற்பட்டதா?

கேரளாவைச் சேர்ந்த ஒருவர் இது தன்னுடைய படம் என்று பிரச்சினையைக் கிளப்பினார். அந்த டென்ஷன் இருந்தது. பிறகு அதையும் பேசித் தீர்த்துவிட்டோம்.

சந்திரமுகயில் சிம்ரன் நடிக்காமல் போனதற்கு என்ன காரணம்?

படத்தில் அவர் நடிக்க வேண்டிய காட்சிகள் எல்லாவற்றையும் ஒரே ஷெட்யூலில் எடுக்கவேண்டும் என்று சொன்னார். வடிவேலுவின் கால்ஷீட், இன்னும் பிற நட்சததிரங்களின் கால்ஷீட்டுகள் எங்களுக்கு ஒரேநேரத்தில் கிடைக்கவில்லை. மேலும் அவர் கர்ப்பமாக இருந்தார். அவரால் வேகமாக ஆட முடியாத நிலைமை. இதனால் அவருக்குப் பதிலாக ஜோதிகா நடித்தார்.

சந்திரமுகி படத்தின் பாடல் காட்சிகளை 'ரஜினி சாா பார்த்துக் கொண்டிருந்தபோது, அவரிடம் மூன்று வருடத்திற்கு ஒரு படம் செய்யறதை விட்டுட்டு வருடத்திற்கு ஒரு படம நடிக்கலாம் என்றேன். அதற்கு அவர் 'நிச்சயமாக' என்றார்.




'மும்பை எக்ஸ்பிரஸ்'

# கவர்ச்சிக்கு சம்மதம் ~ ஸ்ரீதேவிகா

கவர்ச்சிக்கு ஒரு அளவுகோல் உண்டு. நான் நாகரிகப் பெண் கரக்டர் என்றால் கவர்ச்சியாக நடிப்பேன். ஆனால் கவர்ச்சி என்ற பெயரில் ஆபாசமாக நடிக்கமாட்டேன். 'பி.ஏ.ஆங்கில இலக்கியம் படிக்கிறேன். தொடர்ந்து படவாய்ப்புகள் வந்ததால் கல்லூரி போறதைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டேன்.

நடிக்க வராமல் இருந்திருந்தால் ஆங்கிலத்தில் புலமை பெற்று பேராசிரியை ஆகியிருப்பேன். 'ராமகிருஷ்ணா'வில் என் நடிப்பைப் பார்த்து எல்லோரும் பாராட்டினார்கள். 'அன்பே வா', அந்த நாள் ஞாபகம் படங்களில் தற்போது நடித்து வருகிறேன் என்றார் ஸ்ரீதேவிகா.




---

**இனிமேல் 'ஜக்குபாய்' படத்தின் படப்பிடிப்பு நடைபெறாது என்பதால், அஜீத் மூன்று கதாபாத்திரங்களில் நடிக்கும் 'காட்ஃபாதர்' படப்பிடிப்பில் பிஸியாகி விட்டார் இயக்குனர் கே.எஸ். ரவிகுமார்.**

---

# கட்சிப் 'படம்'

விஜயகாந்த் இப்போது ரோஜா கம்பைன்ஸ் காஜா மொய்தீனுக்காக 'பேரரசு' என்ற படத்தில் நடித்துவருகிறார். யாருக் கும் தெரியாமல் தனது சொந்த கம்பெனிக்கு ஒரு புதிய படத்தற்கு கதை கேட்டு ஏப்ரல் மாதம் முடியும் முன் பூஜைக்கும் ஏற்பாடு செய்துவிட்டாராம். அரசியல் பிரவேசத்திற்கு முன் அதிரடிப் படமாக இந்தப் படம் இருக்குமாம்.

---

## ரஜினியை வியக்கவைத்த வடிவேலு!

திடீரென்று வடிவேலுவின் செல்போன் ஒலித்தது. ''ஹலோ'' சொன்ன அவர், மறுமுனையில் பேசுவது ரஜினி என்று தெரிந்து ''சொல்லுங்கண்ணே...'' என்றார்.

''ரொம்ப நல்லாயிருக்கு உங்க காமெடி சந்திரமுகியில ஹைலைட்டாய் இருக்கும். படத்தைப் பார்த்து உங்க ரசிகனா மாறிட்டேன்'' என்று ரஜினி வியந்து பாராட்ட பேசமுடியாமல தவித்தாராம் வடிவேலு.

# பார்த்திப வருட பொதுப் பலன்கள்

## மிதுனம்



எதிலும் கூர்மையாகவும் எந்த கஷ்டம் வந்தாலும் கவலைப்படாமல் செயல்ப்படும். உங்களுக்கு இவ்வாண்டுத் தொடக்கத்தில் அதாவது 26.05.2005 ல் ஜென்மசனி முடிகிறது. ஜென்மசனி முடிவதே உங்கள் வாழ்வில் நல்லதொரு மாற்றத்தினை ஏற்படுத்தும் அமைப்பாகும். குறிப்பாக 4லில் சஞ்சரிக்கும் குருபகவான் வரும் 28.09.2005 முதல் 5ஆம் வீட்டில் சஞ்சரிக்க உள்ளதால் அதன் பிறகு உங்கள் சோதனைகள் யாவும் படிப்படியாகக் குறையும். உங்களுக்கு இருந்த அலைச்சல் ஓரளவுக்குக் குறையும் என்றாலும் மற்றவர்களுக்கு வாக்குறுதி கொடுப்பது முன் ஜாமீன் அளிப்பது போன்றவற்றினை முற்றிலும் தவிர்ப்பது உத்தமம். வேலை இல்லாத இளைஞர்களுக்கு செப்டம்பருக்குப் பிறகு நிலையான வேலை கிடைத்து குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் ஆண்டின் பிற்பாதியில் கைகூடி மன அமைதி ஏற்படும். கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் முன் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். ஏழரைச்சனி நடைபெறுவதால் பொருளாதார ரீதியாக நெருக்கடிகள் இருக்கும் என்றாலும் குரு பகவான் 5ஆம் வீட்டிற்குச் சென்றவுடன் அதாவது 28.09.2005 க்குப் பிறகு உங்களின் கஷ்டங்கள் எல்லாம் பகலவனைக் கண்ட பனிபோல விலகி மனமகிழ்ச்சி ஏற்படும்.

**உடல் நிலை:-** உங்களின் உடல் நலனில் பித்தம், நரம்பு சம்பந்தமான சில உபாதைகள் உண்டாகி சில மருத்துவச் செலவுகள் ஏற்படும். மனைவி புத்திரர்கள் வழியிலும் சாதகமற்ற உடல் நிலைகள்தான் இருக்கும். 28.09.2005க்கு பிறகு ஓரளவுக்கு படிப்படியாக உடல் நிலை சீரடையும். எதிலும் நிதானமும், அலைச்சலும் கூடுமானவரை தவிர்த்து விடவேண்டும்.

**குடும்பம் குழந்தை:-** குடும்பத்தில் கணவன் மனைவி இடையே அடிக்கடி வீண் வம்பு தும்புகள் உண்டாகி மனதில் கசப்பான நிலை உண்டாகும். பிள்ளைகளால் மனச் சஞ்சலமும் உற்றார் உறவினர்களின் வழியில் அடிக்கடி வந்து தொல்லை தருவதோடு பணம் கேட்டும் தொல்லை தருவார்கள். பிற்பாதி காலம் சற்றே சாதகமான சிறு சிறு பலன்கள் மனதில் ஒரு விதமான நிம்மதியினை ஏற்படுத்தும். திருமண சுபகாரியம் தடைப் படும்.

**உத்தியோக நிலை:-** உங்களுடைய முன்னேற்றத்திற்கு தடையாக மேலதிகாரிகள் விளங்குவது வேதனைகளை ஏற்படுத்தும். யாரோ செய்த தவறுகளுக்கும் பொறுப்புகள் உங்கள் தலையிலேயே விழும். நெருக்கமானவர்களே உங்களுக்கு உதவ முன்வரமாட்டார்கள். விரும்பாத ஊர்களுக்கு மாற்றல் அமையும். பிற்பாதியில் நிலமை சற்றே மாறி மனதில் நிம்மதியையும் வேலைப் பளுவும் குறைந்து ஓரளவு ஏற்றம் ஏற்படும்.

**தொழில் வியாபாரம:-** தொழில் வியாபார நிலையில் புதிய முதலீடுகளையும் பெரிய அளவில் அபிவிருத்தித் திட்டத்தையும் செய்யாமல் தவிர்ப்பதும் மிக உத்தமம். ஆழ காலை வைக்கலாம் அகல கால் வைக்காதீர்கள். வேலையாட்களிடம் சற்று அனுசரித்துப் போக வேண்டியது மிக அவசியம். பொருள் தேக்கமும் பணமுடக்கமும் உண்டாகும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளுடன் சற்று விட்டுக்கொடுத்துப் போவது மிகவும் உத்தமம்.

**பெண்களுக்கு:-** மனதில் பலவிதமான கவலைகள் வீண் குழப்பங்கள், குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி குறைகன்ற நிலை உடல் நலத்தில் சோர்வும் உண்டாகும். திருமண சுப முயற்சிகள் தடைப்படும். கணவன் மனைவி இடையே அடிக்கடி தேவையில்லாத சண்டை சச்சரவுகள் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடி இருக்கும். 28.09.2005 க்குப் பிறகு ஓரளவு சாதகப் பலன் கிட்டும்.

**பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு:-** அரசியலில் உள்ளவர்களுக்கு இது சாதகமற்ற காலம் என்பதால் மேடைப் பேச்சுக்களில் கவனம் தேவை. வீண் வம்பு வழக்குகளிலும் ஈடுபட நேரிடும். பதவிக்கு சில சமயம் உடன் இருப்பவர்களால் ஆபத்தினையும் எதிர்கொள்ளும் படி நேரிடலாம். மிகவும் எச்சரிக்கை தேவை.

**கொடுக்கல் வாங்கல்:-** கொடுக்கல் வாங்கலில் மிகவும் எச்சரிக்கை தேவை. தேவையற்ற சிக்கல்களில் சிக்கிக் கொள்ள வாய்ப்பு உள்ளதால் நிதானமாக செயல்பட வேண்டும். புர்வீகச் சொத்து வம்பு வழக்குகளில் சாதகமற்ற பலனும் இழுபறியும் உண்டாகும். கடன்களால் அதிகமான தொல்லைகள் ஏற்படும்.

**விவசாயிகளுக்கு:-** உங்களது பயிர்களில் புழு, பு,ச்சிகள் கறுப்பு நிறப் புளுக்களால் அதிக சேதம் உண்டாகக் கூடும். பெரிய விவசாய பணிகளை மேற்கொள்வது கூடாது. அரசு வங்கிகள் மூலம் வாங்கிய கடனை குறிப்பிட்ட காலத்திற்குள் அடைக்க தடை தாமதம் உண்டாகும். 28.09.2005 க்கு பிறகு ஓரளவு சாதகமான நற்பலன்களை அடைவதால் உங்கள் கவலை விலகும்.

**மாணவ மாணவியருக்கு:-** கல்வியிலும் விளையாட்டிலும் ஆர்வம் குறையும். எடுக்கும் முயற்சிகளை சற்று கடினமாக மேற்கொள்ள வேண்டிய காலமாகும். நல்ல நண்பார்களைத் தேர்வு செய்து பழகுவது உத்தமம். பெற்றோர் ஆசிரியர்களை மதித்து அவர்களின் அறிவுரையினைக் கேட்பது உத்தமம்.

**கலைஞர்களுக்கு:-** முயற்சிகளில் சோதனைகளை வெளியு,ர் பயணங்களால் அதிக அலைச்சலையும் எதிர்கொள்ள நேரிடும். சிலருக்கு புதிய வாய்ப்புகளை இழக்க நேரிடும். 28.09.2005க்கு பிறகு ஓரளவுக்கு சாதகப் பலனைச் சிறிது தாமதித்து பெற்றுவிடுவீர்கள். தன வரவு சுமார்தான்.

### 14.4.2005 முதல் 25.5.2005 வரை

ஜென்மசனி நடைபெறுவதால் உங்களுடைய சோதனைகள் அதிகரிக்கும். அடிக்கடி பயணம் உண்டாகி அலைச்சலையும், மனக்குழப்பம் பண விரயம் போன்றவற்றை சந்திப்பதோடு, உடல் நலமும் பாதித்து விடும். அதிகமான மருத்துவச் செலவுகள் உண்டாகும். மனைவி குழந்தைகள் நலமாக அமைய மாட்டார்கள். கணவன் மனைவி இடையே அடிக்கடி சண்டை சச்சரவுகளை ஏற்படுத்தும் மன அமைதி குறையும். உற்றார் உறவினர் நண்பர்களே விரோதியாக மாறிவிடும் சூழ்நிலை உண்டாகும். தொழில் உத்தியோக நிலையில் மிகவும் நெருக்கடிகளை ஏற்படுத்தும். வியாபாரிகளுக்கு கடுமையான நஷ்டத்தை சந்திக்கவும் நேரிடும். உத்தியோக ரீதியாக சிலருக்கு விருப்ப ஓய்வினை பெற்றிடும் நிலையும் புதிய வேலை அமையத் தடைகளும் உண்டாகும்.

### 26.05.2005 முதல் 27.09 2005 வரை

ஏழரைச் சனி நடைபெறுவதும் 4இல் குரு சஞ்சரிப்பதும் மிகவும் சோதனை தரும் அமைப்பாகும். உடல் நலனில் அதிக அக்கறைஎடுப்பது உத்தமம். மனைவி வழியில் கர்பக்கோளாறுகள் மாதவிடாய் கோளாறுகளை ஏற்படுத்தும். பிள்ளைகளால் மன சஞ்சலம் உண்டாகும். மருத்துவச் செலவுகளும் வீண் செலவுகளும் உண்டாகி மன வேதனை ஏற்படுத்தும் கணவன் மனைவி இடையே அதிக சண்டை சச்சரவு பிரிவினை கூட ஏற்படுத்தும் தொழில் பொருளாதார நிலையில் நெருக்கடிகளும் கைப்பொருள் இழக்கும். சூழ்நிலைகளும் உண்டாகும் இலாபம் இல்லாத நிலையால் தொழில் வியாபாரம் படு மந்தமடையும் கூட்டுத்தொழிலில் மிகவும் எச்சரிக்கை தேவை உத்தியோக நிலையில் வீண்பழி வேலைப் பளுவும் சுமக்க நேரிடும். மாணவர்கள் சோம்பலாக அமைவார்கள்.

### 28.09.2005 முதல் 22.11.2005 வரை

ஏழரைச் சனி நடைபெற்றாலும் குரு பகவான் 5இல் உள்ளதால் உங்களது ஏற்றங்கள் மன மகிழ்ச்சியை ஏற்படுத்தும் உங்கள் உடல் நலம் வெகு சிறப்பாக தேறிவிடும். மனைவியின் கர்ப்பக் கோளாறுகள் விலகி புத்திர பாக்கியம் என்னும் இனிய சொல் கேட்பீர்கள் பிள்ளைகளால் பெருமை உண்டாகும் கணவன் மனைவி இடையே கருத்து ஒரு மித்து கலகலப்புடன் காணப்படுவார்கள் திருமண சுபகாரியத்தினை மளமள வென் நடத்தி முடித்து மகிழ்ச்சியடைவீர்கள் தொழில் வியாபாரம் முன்னேற்றமான நிலையினை ஏற்படுத்துவதோடு அதிக இலாபமும் கிட்டும் கூட்டுத்தொழில் வியபாரம் சிறப்படையும். உத்தியோக நிலையில் பதவி ஊதிய உயர்வுகள் தடைவிலகி வந்து மன மகிழ்ச்சியினை ஏற்படுத்தும் புதிய வேலை வாய்ப்பு அமையும் உற்றார் உறவினர்கள் நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் அமையும் அரசியலில் பெயர் புகழ் கூடும் மாணவர்கள் வெற்றி பெறுவார்கள்.

### 23.11.2005 முதல் 05.03.2006 வரை

இக்காலத்தில் சனி வக்கர கதியில் சஞ்சரிப்பதும் 5ஆம் வீட்டில் குரு சஞ்சரிப்பதும் ஏற்றத்தினை ஏற்படுத்தும் இக்காலம் ஒரு சிறப்பான காலமாக அமையும் என்பதில் ஏதும் ஐயம் இல்லை உடல் நலம் பலமும் வலிமையும் கூடும் எதிரிகள் ஓடி ஒழிவார்கள். புர்வீக சொத்துக்கள் வம்பு வழக்குகளில் வெற்றி பெற்று சேருகின்ற யோகம் சிறப்பாக அமையும் குடும்பத்தில் நிலவிய மந்தமான நிலை விலகி சுபிட்சமான நிலையினை அடைவீர் கள் இதுவரை தொழில் வியாபார நிலையில் இருந்த தடைகள் மறைமுக எதிர்ப்புகள் விலகி சிறப்பான இலாபம் அமையும் புதிய தொழில் தொடங்குவது பெரிய முதலீடுகளை ஈடுபடுத்துவது போன்வற்றில் அற்புதமான பலனை அடைவீர்கள் உத்தியோக ரீதியாக உங்களுக்கு விரும்பிய இடமாற்றமும் பதவி உயர்வும் அமையும் மாணவர்களின் மதிப்பெண் கூடும்.

### 06.03.2006 முதல் 13.04.2006 வரை

குருவக்கிர கதியில் உள்ளதும் 4இல் கேது இருப்பதும் சாதகமற்ற அமைப்பாகும். இக்காலத்தில் உங்கள பொருளாதார நிலையில் மிகவும் சோதனை தரும் அமைப்பாகும் யாரையும் நம்பி பெரிய தொகை தருவதோ வாக்குறுதிகள் தருவதையோ கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் சிக்கனத்தை கடை பிடிப்பது உத்தமம். பொருளாதார நிலையில் சாதகமற்ற போக்கு நிலவும் கணவன் மனைவி இடையே அடிக்கடி சண்டைசச்சரவுகளை ஏற்படுத்தும் தொழில் வியாபார நிலையில் மிகவும் சோதனைகளை ஏற்படுத்தும் .அரசு மூலம் எதிர்பாராத சோதனைகளை எதிர்கொள்வீர்கள் கூட்டுத் தொழில் சிலருக்கு பிரிவுகளை ஏற்படுத்தும் உத்தியோக நிலையில் அடிக்கடி விடுபபு எடுத்த அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும அரசியலில் உடன் இருப்பவர்களால் தேவையில்லாத சங்கடங்களைச் சந்திக்க நேரிடும்.

## நட்சத்திரபலன்கள்

### மிருக சீரிடம் 3,4 பாதம்

எடுக்கும் எந்த ஒரு முயற்சியிலும் தடை தாமதமே உண்டாகும் தொழில் சரிவர நடைபெறாது பொருளாதார நிலையில் நெருக்கடிகள் போட்டிகள் பொறாமைகளும் உண்டாகி நலிவடையும் இலாப்மும் உற்பத்தியும் பாதிப்படையும் கூட்டுத்தொழில் செய்வர்களுக்கு ஓரளவு மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது வியாபாரம் பொருள் தேக்கமுடன் கொள் முதல் பொருட்களில் தரமற்று நுகர்வோரின் அதிருப்தியை ஏற்படுத்தும். பணவரவு தடைப்படும் குடும்ப வாழ்வில் சிக்கல்களும் அலைச்சலும் பற்றாக்குறையும் கடன் தொல்கைகளும் உண்டாகும் உற்றார் உறவினர்கள் விரோதம் பாராட்டுவார்கள். 28.9.2005க்கு பிறகு ஓரளவு ஏற்றம் ஏற்படும்.

### திருவாதிரை

உடல் நலம் அடிக்கடி பாதிக்கும் மருத்துவச் செலவுகள் உண்டாகும் பொருாளார நிலையில் தடைதாமதம் ஏற்பட்டு கடன்களால் அதிக தொல்லைகளை அடைய நேரிடும் எடுக்கும் காரிய ஜெயம் தராது குடும்பவாழ்வில் கணவன் மனைவி இடையே ஒற்றுமை குறைவும் சகோதரர்களிடையே பிரச்சினைகளும் தலைதூக்கும் கொடுக்கல் வாங்கலில் மிக எச்சரிக்கை தேவை வாக்கு தவறும் சூழ்நிலை உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு அதிகமான வேலைப்பளுவும் பொறுப்புகளும் மிகுந்த மன வருத்தத்தினை ஏற்படுத்தும் வண்டி வாகனம் பயன்படுத்துபவர்கள் பொறுமையாக செயல்பட வேண்டும்.

### புனர்பூசம் 1,2,3 பாதம்

உத்தியோக ரீதியாக எதிர்பாராத இடமாறுதல் உண்டாகி குடும்பத்தை விட்டு சிலர் தனியாக வாழ நேரிடலாம். சிலருக்கு அங்கும் இங்குமாக அலைச்சலும் மனக்குழப்பமும் உண்டாகும். பதவி ஊதிய உயர்வுகளை எதிர்பார்க்க முடியாது. அதிகாரிகளிடமும் உடன் ஊழியர்களிடமும் அனுசரித்துப் போக முடியாது வெளிவட்டாரப் பழக்கத்தில் நன்மைகள் அமையாது பல விதத்திலும் உற்றார். உறவினர்களின் தொல்லை அமையும் தொழில் வியாபாரத்தில் மிகவும் மறைமுக போட்டிகளை சந்திக்க நேரிடும் கலைஞர்களுக்கு சோர்வினை ஏற்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு பெயர் புகழ் பாதிக்கும் எதிர்பாராமல் இருக்கும் வீட்டை மாற்ற நேரிடும்.

### அதிர்ஷ்ட குறிப்புகள

அதிர்ஷ்ட தேதிகள் 5,14,23, 30 அதிஷ்டகிழமை புதன், அதிஷ்டநிறம்பச்சை, அதிஷ்டதெய்வம் விஷ்ணு, அதிஷ்ட திசை வடக்கு, அதிஷ்டகல் மரகதம்.

**பரிகாரம் :** உங்களுக்கு ஏழரைச் சனியில் 26.5. 2005 முடிய ஜென்மசனியும் அதனைத் தொடர்ந்து மாதச்சனியும் நடைபெறவுள்ளதால் சனிக்கிழமை விரதம் கடைப்பிடிப்பதும் சனிபகவானுக்கு எள் எண்ணெய் தீபம் ஏற்றி நில மலர்களால் அர்ச்சனை செய்வது ஆஞ்சநேயரை வழிபாடு செய்வதன் மூலம் கெடுதிகள் விலகும் 28.9.2005 முடிய குருபகவான் 4இல் சஞ்சரிப்பதால் குருப்ரீதி தட்சிணாமூர்த்திக்குகொண்டை கடலை மாலை அணிவித்து வியாழக்கிழமைகளில் தரிசியுங்கள்.

(தொடரும்)

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு - குறள்

வலம்புரி

## வீதி விஸ்தரிப்பு துரிதப்படுத்த வேண்டும்

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. வாகனப் பெருக்கம், வீதிகளின் ஒடுக்கம், வீதி ஒழுங்கு முறைகளை சரியான முறையில் புரிந்துகொள்ளாமை, மற்றவர்கள் பற்றிய அக்கறையினம் போன்றவை காரணமாகவே வீதி விபத்துக்கள் அதிகரித்துச் செல்கின்றது.

குறிப்பாக மோட்டார் சைக்கிள் பாவனை, இளைஞர்களின் வேகமான ஓட்டம் என்பவற்றை பார்க்கும்போது வீதியில் இறங்கமுடியாது போன்ற மன உணர்வை ஏற்படுத்துகின்றது.

அதேநேரம் வீதிப் போக்குவரத்தை கண்காணிக்கின்ற பொலிஸாரின் இரட்டை வேடமும் வீதி விபத்து ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

அதாவது, வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபடுகின்ற பொலிஸார் இலஞ்சங்களுக்கு இடம்கொடாது தமது கடமையை செவ்வனே நிறைவேற்ற வேண்டும். இவ்விதம் பொலிஸார் நேர்மையுடன் நடக்கின்றபோது வீதி விபத்துக்களை தடுப்பதில் வெற்றியடைய முடியும்.

அதேநேரம் காலத்திற்குக் காலம் அதிகரித்து வரும் வாகனப் பெருக்கத்திற்கு ஏற்ப வீதிகளை விஸ்தரிப்பது தேவையானதொன்றாகும். இவ்வாறு வீதிகளை விஸ்தரிக்கின்றபோது அது தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படவே செய்யும்.

யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய பிரதான வீதிகளை விஸ்தரிக்க வேண்டும் என்ற கருத்து 1980களுக்கு முன்னரே முன்வைக்கப்பட்டதாயினும், அரசியல், பொருளாதார காரணிகள் அதற்கு இடம்தரவில்லை. குறிப்பாக யாழ். மாநகரப் பகுதிக்குள் வீதி விஸ்தரிக்கும் தேவைப்பாடு இருந்த போதிலும் மாநகர ஆட்சியைப் பிரதிபலித்த அரசியல்வாதிகளின் செல்வாக்கு அதற்கு இடம்கொடுக்கவில்லை.

அதன் பின்னர் சுமார் 15 வருடங்கள் அரசியல் ஆட்சியின்றி ஆணையாளர்களின் கீழ் மாநகர சபை இயங்கிய காலங்களில் வீதி விஸ்தரிப்புகளை மேற்கொண்டிருக்க முடியும். அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாநகர சபையில் இருந்து இளைப்பாறிய ஆணையாளர்கள், விலகிச் சென்ற மேயர்கள் தடைக்கல்லுப் போட்டனர். இவர்களின் திருகுதாளங்களால் யாழ். மாநகர வீதிகள் அகட்டப்படாமல் அப்படியே விடப்பட்டது.

இப்போதுகூட அந்தக் குரல்கள் கூப்பாடுபோடும் சத்தங்கள் எங்கோ கேட்கவே செய்கின்றது. மண்ணை மறந்து விமானம் ஏறியோர்களுக்கு நம்மீது இருக்கும் அக்கறை என்பதற்கு அப்பால் வீதி அகட்டப்படுவதால் தங்களின் நிலங்கள் பறிபோய்விடும் என்ற ஏக்கத்துடனேயே தூர தேசக் குரல்கள் ஒலிக்கின்றன.

வீதி அகட்டப்படுவது அது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதெல்லாம் யாழ்ப்பாண நிர்வாகத்தால் செய்யப்படவேண்டியதாகும்.

ஆனால், வீதி அகட்டப்படுகின்றபோது மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவது மிகவும் அவசியமானதாகும். அரசு - புலிகள் செய்துகொண்ட போர்நிறுத்த உடன்படிக்கை மூலம் நாட்டில் சமாதானம் ஏற்பட்டதோ! இல்லையோ ஆனால் யாழ்ப்பாணத்தில் காணிகளின் விலைகள் மட்டும் இமயம் வரை உயர்ந்துவிட்டது. ஆக, வீதி அகட்டக்கூடிய பல்வேறு சந்தர்ப்பங்களை எல்லாம் கைவிட்டுவிட்டு இப்போது காணி விலை உச்சம் பெற்றிருக்கும் வேளையில் வீதிகளை அகட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது கடினமான விடயமே.

எதுவாயினும் வீதி விஸ்தரிப்புக்காக காணிகளை சுவீகரிக்கும்போது அதற்குரிய நியாயமான நட்டணத்தை மக்களுக்குச் செலுத்துவதன் மூலமே வீதி அகட்டல் என்ற விடயம் சாத்தியமாகும். அதே நேரம் வீதி விஸ்தரிப்பு எனப் பேசிக்கொள்ளாமல் அதனை விரைவுபடுத்துவது காலத்தின் தேவையாகும்.

# தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குக

## மனிதவுரிமை பாதுகாப்புக்குழு பிரதமரிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**தமிழர் தாயகப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்க பாதுகாப்பு வலயங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் உடன் நிறு நாட்டிலுள்ள சகல மக்களும் கௌரவமாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதுட சமாதான நடவடிக்கைகளையும் உடன் ஆரம்பிக்குமாறு மனிதவுரிமை பாதுகாப்புக் கு வின் சுதந்திர முறைப்பாட்டு நிலையம் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இந் நிலையத்தின் வட மாகாண இணைப்பாளர் எஸ். மோகன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ள மகஜரிலேயே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ள இம் மகஜரின் விபரம் வருமாறு,

நாட்டின் இனப்பிரச்சினைக்கு மூல காரணமாவது தமிழர் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களே என்பது தாங்கள் அறியாததல்ல. அந்த வகையில் ஒட்டுமொத்தமான கிழக்கு மாகாணமாகவிருந்த அம்பாறையையும் திருகோணமலையையும் 1956, 1958 காலப் பகுதியில் திட்டமிட்டுப் பிரித்து குடியேற்றத் திட்டங்கள் எனும் போர்வையில் வெளிமாவட்ட சிங்கள மக்களைக் குடியேற்றியமையே முதலாவது காரணமாகும். அன்று அவ்வாறு திட்டமிட்ட வகையில் தமிழ் மக்களுடைய காணியில் வெளிமாவட்ட சிங்கள மக்களை குடியேற்றியதுதான் இந்நாட்டின் தமிழ் - சிங்கள இனப்பிரச்சினையின் உச்சகட்டமாகும். அதேபோன்று ,வடகிழக்கில் தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் தமிழ் பெயர்களைச் சிங்கள பெயர்களாக மாற்றுவதும், தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களை யதார்த்தம் புரியாமல் சிங்களப் பிரதேசமாக சித்திரித்துக்காட்டி சுய அரசியல் இலாபத்திற்கான போலி அரசியல் நாடகத்தின் விளைவுதான். இன்று தமிழர் தனி நாடு கேட்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள். மானிடவியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் தாம் பிறந்து தேசத்தில் இரத்த உறவுகளோடு தொடர்புறுகின்ற மண்ணை வேறொருவர் சுவீகரிக்கின்ற நேரத்தில்தான் அவன் தனது மண்ணைப் பாதுகாக்க போராடிட வேண்டிய நிலையும் பிரிந்து போகின்ற சூழ்நிலையும் ஏற்படுகின்றது.

ஆகையினால் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடது சாரிகளுடன் இணைந்த கூ அரசாங்கங்களும் இந்த நாட்டின் பல்லினத் தன்மை மறந்ததும் நாட்டின் அவல நிலைக்கு காரணமாகும்.

அந்த வகையில், இந்த இரண்டு பாரம்பரிய அரசிய கட்சிகளில் மாறுபட்ட ஓர் சிந்தனை கொண்ட ஓர் பிரதமர தங்களை நோக்குகின்ற இந்த வேளையில், அதுவும் தா கள் பிரதம மந்திரியாக இருக்கின்ற காலகட்டத்தில் திட் மிட்ட எந்தக் குடியேற்றங்களையும் அனுமதிக்க வேண் மென நாம் வேண்டுகிறோம்.

ஏனெனில் நானும் எமது அமைப்புக் குழுவினரும் நேர யாக கிழக்கு மாகாணம் சென்று வாகரைப் பிரதேச செயல ளர் உதயகுமாருடன் கலந்துரையாடி அந்த மக்களின் அவல நிலையினை கேட்டுப் பார்த்து அதிர்ச்சியடைந்தோ

அந்நேரத்தில் தான் நூறு வீதம் தமிழர் வாழும் ஓர் பி தேசத்தின் இடையில் மாங்கேணியில் சுனாமிக்குப் பின் ரான ஓர் சிங்கள அகதி முகாம் இருப்பதைக் கண்டோம். பின் நாம் ஆராய்ந்த போது ஒரு சில சிங்கள குடும்பங்கள் மீ பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்ததாகவும் அவர்களிற்கு அர பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்ததாகவும் சுனாமி அனர்த்த தின் பின் ஓர் சிங்களக் கிராமமாக உருவெடுப்பதற்குரிய வகையில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதா வும் அறிந்தோம். ஆனால் இந்த மக்களின் சகல நலன்களை யும் இராணுவம் கவனிப்பதாகவும் அறிந்தோம். இதிலிருந் என்ன தெரிகிறது? தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பிரதேச தில் திட்டமிட்ட வகையில் அப்பாவி சிங்கள மக்களைக் கு யேற்றி அவர்களிற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்குவத மூலமாக அங்கு வாழும் தமிழர்களிற்கும் சிங்கள மக்களி கும் இடையில் முறுகலை உருவாக்க அரசும் அரச இய திரங்களும் முயல்கிறதா? என்ற சந்தேகம் ஏற்படுவது நிய யமே. ஆகவே ஒவ்வொரு காலங்களிலும் தமிழ் மக்களிற்கு சிங்கள மக்களிற்கும் பகைமையை கூட்டி அரசியலில் குளிர் காய்ந்த தென்னிலங்கை அரசியல்வாதிகளிற்கு இது புரியவேண்டும்.

மற்றும் மலையகத்திலும் திட்டமிட்ட குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. மலையக மக்கள் வாழ்ந்த வரலாற்று ரீதியான பிரதேசங்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய வாழ்வாதாரப் பிரதேசங்களில் அபிவிருத்தி எனும் பெயரால் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட குடியேற்றங்கள் நீர் நிலை அபகரிப்புகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் என்பன நிறுத்தப்படல் வேண்டும்.

அதேபோன்று வடகிழக்கில் தமிழர்களுடைய வரலாற்று தாயகத்தில் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட குடியேற்றங்கள் உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தி இந்த நாட்டின் சகல மக்களும் கௌரவமாக வாழக்கூடிய ஓர் சூழ்நிலையை உருவாக்குவதுடன் இந்த நாட்டின் எதிர்கால குழந்தைகளுக்காக நிரந்தர சமாதானத்தையும் ஏற்படுத்தத் தாங்கள் முயற்சிக்க வேண்டும் என அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பாடசாலைகளுக்கிடையிலான ஆளுநர் கிண்ண கிரிக்கெட்போட்டி

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையில் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆளுநர் கிண்ண கிரிக்கெட் போட்டி ஒன்றினை நடத்துவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடுகள் செய்துவருகின்றது. மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் பாடசாலை மாவட்டங்களுக்கிடையிலான சுற்றுப் போட்டிக்கு அனுமதிக்கப்படும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள் ஒரு குழுவாகவும் திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பாடசாலைகள் வேறு ஒரு குழுவாகவும் இருக்கவேண்டும். அத்துடன் 01.01.1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்கள் இச் சுற்றுப்போட்டியில் பங்கேற்க முடியும்.

இதில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலைகள் தமது விண்ணப்பங்களை மே மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் அனுப்பிவைக்குமாறு மாகாண கல்விப் பணிப்பாளரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. போட்டிகள் 30 ஓவர்கள் கொண்டதாக நடத்தப்படும்.(க)

## பாடசாலை நிர்வாகத்துக்கு எதிராக சிற்றூழியர் புகார்

(பொன்னாலை)

தீவகத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் சிற்றூழியர் ஒருவர் தனது மாதாந்த வேதனத்திலிருந்து ஒரு தொகைப் பணத்தை அந்தப் பாடசாலை நிர்வாகம் பிடித்தம் செய்வதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனகது வழங்கப்படும் மாதாந்தச் சம்பளத்திலிருந்து ஆயிரம் ரூபா காரணம் எதுவும் கூறப்படாமல் பிடித்தம் செய்யப்படுவதாக அந்த முறைப்பாட்டில் சிற்றூழியர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(து-49)

## விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் அனுசரணையுடன் நடாத்தும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு விழா இன்று நடைபெறுகிறது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில நடைபெறவுள்ள இவ் விளையாட்டு விழாவிற்கு யாழ்ப்பாண அரச அதிபர் கே. கணேஷ் பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட விளையாட்டதிகாரி ஆர்.றொகான் சிறப்பு விருந்தினராகவும், வடமராட்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பா ளர் என்.இன்பன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர்.

(7-52)

## பயிற்சிப் பட்டறை

(பொன்னாலை)

அறவழி போராட்டக் குழு, மனிதநேய அமைப்புக்களின் கட்டமைப்பு ஆகியன இணைந்து நடாத்தும் "சமாதானத்தைக் கட்டியெழுப்பும் மீளிணக்கத்தின் நிலைமாற்றப் பிரச்சினைகள் குறித்த ஒரு வழி காட்டல்" என்ற பொருளிலான பயிற்சிப்பட்டறை இம்மாதம் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் அறவழிபோராட்டக் குழுத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ்.அருளானந்தத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பங்குபற்ற விரும்புவோர் தத்தமது பதிவுகளை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இப்பயிற்சி நெறியானது, சமூகங்களுக்கிடையே சமாதான முன்னெடுப்புக்கும், மீளிணக்கத்துக்குமான ஊக்கத்தையும் விருத்தி செய்வதற்காக நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(7-49)

## ॐ தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நாம் நமது கற்பனையால் நமது அனுமானத்தால் உருவாக்கிக் கொண்டிருக்கும் உலகத்தைத் துறந்து விட வேண்டும். ஏனென்றால் இந்த அனுமானம் முழுமையற்ற அனுபவத்தை ஆழமற்ற அறிவை நமது சொந்த பலவீனத்தை அடிப்படையாகக் கொண்டது. அதைத் துறந்துவிடுங்கள். நாம் இதுவரை நினைத்து வந்த எல்லோரும் உடும்புப் பிடியாக பிடித்துக் கொண்டிருக்கும் உலகம். நமது கற்பனையில் தோன்றிய பொய்யான உலகம் அதை விட்டுவிடுங்கள்.

சுவாமி விவேகானந்தர்




## மினிபஸ்...

சந்தியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் தலைக்கவசம் அணிந்திருந்ததால் உயிர் தப்பினார். அவருடன் கூடவந்த தேவராஜா உதயகுமார் (வயது 26) என்பவர் உயிரிழந்தார். பஸ்சாரதி தலைமறைவாகியுள்ளார்.

இச்சம்பவத்தில் வீதியால் சைக்கிளில் சென்ற நபர் ஒருவரும், மோட்டார் சைக்கிளில் சென்றவர்களான செறஞ்சித், தேஜெயராஜா ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தை அடுத்து அங்கு திரண்ட உயிரிழந்தவரின் உறவினர்கள் மினி பஸ்சை தீமூட்டி எரித்ததாகக் கூறப்படுகின்றது.

இருபாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் ஒன்று தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முடித்துக்கொண்டு திரும்பிக்கொண்டிருந்தபோதே மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா நிலைமைகளை அவதானித்தார். தீக்கிரையாக்கப்பட்ட மினிபஸ்ஸூம், மோட்டார் சைக்கிளும் பொலிஸ நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக கோப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி சிறிசெல்வம் தெரிவித்தார். (த-74)

## ஐரோப்பிய பாராளுமன்றில்...

பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் ஒயின் றியானிடம் தெரிவித்தார். இச்சந்திப்பில் ஒயின் றியான் கருத்துத் தெரிவிக்கையில்,

சுனாமியால் ஏற்பட்ட சேதங்களை மீள்கட்டுமானம் செய்யும் பணியானது யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினரை இணைத்துப் பணியாற்றுவதற்கு ஊக்குவிக்கக்கூடியது என்றும், இதனால் ஏற்படக் கூடிய பரஸ்பர நல்லெண்ணமே தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வழிகோலும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

சர்வதேச உதவிகளை நியாயமான வகையில் பகிர்வதற்கு காத்திரமான ஒரு பொதுக்கட்டமைப்பினை அமைப்பதே இலங்கை அரசாங்கம் நல்லெண்ணத்தையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்தவுள்ள ஒரு சரியான வழியாகும் என்றும், பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளுக்கு நேரில்சென்று உண்மையைக் கண்டறியும்குழு ஒன்றை அனுப்பவேண்டுமென்றும் தமிழ்ச்செல்வன் கேட்டுக்கொண்டார். (த-04)

## புலிகளின்...

முன்னெடுக்கவும் அரசின் உயர் மட்டத்தில் காய்நகர்த்தல்கள் இடம்பெற்றதாக அறியமுடிகிறது. இது விடயத்தில் புலிகளின் நிலைப்பாடு என்னவென்பதை அறிவதில் அரசதரப்பு ஆர்வம் காட்டுவதாகவும், அத்துடன் நாட்டில் எதிர் கொள்ளப்படும் பல்வேறு பிரச்சினைகளை சிறிதுகாலம் கொண்டிழுப்பதற்கு தேர்தல் ஜுரத்தை அரசு பயன்படுத்தத் தீர்மானித்திருப்பதாகவும் அறியமுடிகிறது. (த)

## பொதுக்கட்ட..

இதனால் புலிகளே நன்மையடையப் போகின்றனர். இதனை ஜனாதிபதிக்கு உணர்த்தவே 30 ஆயிரம் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சந்தாலோக தேரர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி நாளை திங்கட் கிழமை நாடு திரும்பியதும் மகஜரை கையளிக்க தேசிய பிக்குகள் முன்னணி தீர்மானித்துள்ளது. (க)

## விடுமுறை...

பி.கே.ஜி.அபயசிங்க மற்றும் கோப்ரல் ஏ.எம்.எல். பிரேமகுமார ஆகியோரே மரணமாகியவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த இராணுவச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டநிலையில் தற்சமயம் சாவகச்சேரிப் பொலிஸாரினால் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டார். இது பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சம்பவம் இடம்பெற்ற முகாமுக்கு நான் நேரில் சென்று அங்கு கடமையாற்றிவரும் படைத்தரப்பினருடன் உரையாடினேன். பிரஸ்தாப இராணுவ அதிகாரிக்கும் இராணுவச் சிப்பாய்க்கும் இடையிலான தனிப்பட்ட தகராறே இதற்குக் காரணமாகும்.

துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றபோது இந்த சம்பவத்துடன் தொடர்பு எதுவும் இல்லாத இரண்டு இராணுவச் சிப்பாய்களும் சூட்டுக் காயங்களினால் மரணமாகியுள்ளனர். விடுமுறை விண்ணப்பக் கோரிக்கை தொடர்பாகவே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என அவர் தெரிவித்தார்.

நேற்று மாலை உயிரிழந்த இராணுவத்தினர் மூவரின் சடலங்களும் கொழும்பிற்குக் கொண்டுசெலப்பட்டதாக அறியவந்தது.(த-04)

## சொருவில்...

நடைபெற்ற தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். இவருடைய மனைவி பிள்ளைகள் தற்போதும் இந்தியாவில் தமிழ்நாட்டின் சலாம் கிராமத்தில் வாழ்ந்துவருகின்றனர்.

இறந்தவரின் உடலை மீட்டுத் தருமாறு அவருடைய குடும்பத்தவர்கள் இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு அமைச்சை அணுகியுள்ளனர்.

இதனால் இந்திய வெளிநாட்டு அமைச்சில் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கையின் சமாதானத்தைக் குழப்பும் சக்தி இந்தியாவா? என இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் அச்சமடைந்துள்ளதாக வேறொரு தகவல் தெரிவிக்கின்றது. (த-04)

## கருத்தரங்கு

மொறட்டுவ பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய மன்ற ஏற்பாட்டில் தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல், ஆற்றல் மேம்படுத்துகை மற்றும் கணினியியல் சம்பந்தமான கருத்தரங்கு இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், நாளை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும். (து)

## சொல்ஹெய்ம்...

விஜயம் செய்வார். அங்கு தற்போதைய பாதுகாப்பு நிலைபரம், சுனாமியின் பின்னரான நிலைமைகள் குறித்து பல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

இவ் விஜயங்களை முடித்துக் கொண்டே அவர் கிளிநொச்சிக்குச் செல்கிறார். (த-08)
















## மரண அறிவித்தல்



**லயன் நவரட்ணம் ஜெயத்திலகன்-(BANKER)**

**இளைப்பாறிய வங்கியாளர் – இலங்கை வங்கி, செலான் வங்கி, இந்து வாலிபர் சங்கச் செயலாளர், அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயப் பொருளாளர் (யா/திருநெல்வேலி வட்ட லயன் கழக தலைவர்)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் ஜெயத்திலகன் 15.04.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் புனிதவதி தம்பதிகளின் அன்புமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், ஜெயதீசன் (லண்டன்), ஜெயசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞலேபா (லண்டன்), டொலி (லண்டன்), சத்தியநாதன் (அவுஸ்ரேலியா), Dr. இராசமுத்தையா (லண்டன்), காலஞ்சென்ற ரஞ்சிதபூரணி, மக்கள் வங்கி கதிர்காமநாதன், கொழும்பு ஆயுர்வேத Dr. நளாயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சேயோன் (லண்டன்), சப்ரீனா (லண்டன்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும்,

இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர் கோபாலகிருஷ்ணனின் சகலனும், ஆசிரியர் பரியோவான் கல்லூரி கோபிகிருஷ்ணனின் அன்புச் சித்தப்பாவும், துஷ்யந்தி (கனடா), துக்காயினி (அவுஸ்ரேலியா), றூபினி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.04.2005ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை (இன்று) பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

92, பலாலி வீதி,<br>
திருநெல்வேலி<br>
021 - 2223113

தகவல்:<br>
மனைவி<br>
விசாலாட்சி

(9524)

## விசேட கழிவுக்கட்டணம் புதுவருடத்தை முன்னிட்டு

புதுவருடத்தை முன்னிட்டு வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கு அனுப்ப வேண்டிய உடை, உணவு, அலங்காரப்பொருட்கள் அத்துடன் கடிதங்கள், வீடியோ நாடாக்கள், அல்பங்கள் ஆகியவற்றை உலகின் எந்த நாட்டிற்கும் குறைந்த கட்டணத்தில் விரைவாக எம்மால் பொதி செய்து அனுப்பிவைக்கப்படும்.

கட்டண விபரம்

| | |
|---|---|
| ஐரோப்பிய நாடுகளுக்கு (பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, கொலண்ட் | 1Kg - 650/= |
| ஏனைய நாடுகளுக்கு (கனடா, அமெரிக்கா, அவுஸ்தரேலியா , லண்டன் | 1Kg - 950/= |

தொடர்புகளுக்கு:-

**RAINBOW TRAVEL &TOURS**

32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.<br>
(அபிநயா நகைமாடத்துக்கு மேல்)<br>
தொலைபேசி - 222 3918, 0777 328219

குறிப்பு:- எமது நிறுவனம் கொழும்பை தலைமைக் காரியாலயமாகக் கொண்டு இயங்குகிறது.

